விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 076 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 21 புதன்கிழமை (05.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப
# இலங்கைக்கு இதுவே சரியான தருணம்
### ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர்



(ஜெனிவா)

பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தி நல்லிணக்கத்தைக்கட்டியெழுப்ப இலங்கைக்கு இதுவே சரியான தருணம் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ் தானிகர் வோல்கர் டேர்க் தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## அரச நிறுவனங்களை மறுசீரமைக்க வேண்டும்
### ஐ.எம்.எப் தெரிவிப்பு

(கொழும்பு)

வரி செலுத்துவோருக்குப் பாதகமான தாக் கத்தை ஏற்படுத்தாத வகையில், இந்த நாட்டில் உள்ள அரச நிறுவனங்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரி வித்துள்ளது.

நேற்று நடைபெற்ற செய்தி 02ஆம் பக்கம் பார்க்க

## மோ.சைக்கிளிலிருந்து தவறிவிழுந்த பெண் மரணம்
### இருபாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளிலிருந்து தவறிவிழுந்த பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த சாம்ப சிவம் தங்கம்மா (வயது-79) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

விபத்துக்குள்ளான 15ஆம் பக்கம் பார்க்க

## தையிட்டியில் பொதுமக்கள் காணியை விடுவிக்க நடவடிக்கை
### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

யாழ்ப்பாணம் தையிட்டியில் பாதுகாப்புக்கு அச் சுறுத்தல் ஏற்படாமல் பொதுமக்கள் காணியை விடு விக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச் சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச் சரவைத் தீர்மானங் 15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணியில் எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதியில்
### பொலிஸ் பாதுகாப்புக்கு மேலதிகமாக அபிவிருத்தி உறுப்பினர்களை நியமிக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் உள்ள சித்துப்பாத்தி இந்து மயா னத்தில் மனித எலும்புகள் கண்டு பிடிக்கப்பட்ட பகுதிக்குப் பொலிஸ் பாதுகாப்புக்கு மேலதிகமான கண் காணிப்புப் பணிக்கு மயான அபி விருத்திக்குழு உறுப்பினர்கள் ஐவரை நியமிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்

02ஆம் பக்கம் பார்க்க

## உள்ளூராட்சித் தேர்தல் தபால்மூல வாக்களிப்பு
### மார்ச் 12ஆம் திகதி நள்ளிரவு வரை விண்ணப்பங்கள் ஏற்கப்படும்

(கொழும்பு)

2025ஆம் ஆண்டு உள்ளூ ராட்சித் தேர்தலில் தபால் மூல வாக்குப் பதிவுக்கான விண்ணப் பங்கள் மார்ச் 12ஆம் திகதி நள்ளிரவு வரை ஏற்றுக்கொள் ளப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள் ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## அதிகாரங்களைப் பகிர்வதன் மூலம் ஆட்சியில் முன்னேற்றம் ஏற்படும்
### ஐ.நாவில் இலங்கை தொடர்பில் இணை அனுசரணை நாடுகள்

(ஜெனிவா)

இலங்கையில் அதிகாரங் களைப்பகிர்வதன்மூலம் ஆட்சி முறையில் சீர்திருத்தங்கள் ஏற் படுவதுடன் முன்னேற்றம் ஏற் படும் என இணை அனுசரணை நாடுகள் ஐநாவில் வேண்டுகோள் விடுத்துள்ளன.

பிரிட்டன், வட அயர்லாந்து கனடா, மலாவி, மொன்டிநீக்ரோ, வடக்கு மசடோனியா ஆகிய நாடுகள் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கையில் கடந்த வருடம் தேர்தல்கள் அமைதியான முறையில்இடம்பெற்றதையும் அமைதியான ஆட்சி மாற்றத் தையும் நாங்கள் வரவேற்கின் றோம்.

புதிய அரசாங்கம் ஆட்சிப் 15ஆம் பக்கம் பார்க்க

## செயற்படுத்த முடியாத வாக்குறுதிகளை வழங்கி ஆளும் தரப்பு பொய்யராகிவிட்டது
### நாமல் ராஜபக்ஷ எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

தேர்தல் காலங்களில் செயற் படுத்த முடியாத வாக் குறுதிகளை வழங்கி இன்று ஆளும் தரப் பிலுள்ள 159 உறுப் பினர்களும் பொய் யர்களாகிவிட்டதாகப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரி வித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரி விக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

02ஆம் பக்கம் பார்க்க

## கொக்குவிலில் வாள்வெட்டு
## இளைஞன் ஒருவரின் கைவிரல் துண்டானது

(யாழ்ப்பாணம்)

கொக்குவிலில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞன்ஒருவரின்கைவிரல் துண்டாடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

கைவிரல் துண்டாடப்பட்ட இளைஞன் கொக்குவில் பகுதி யில் உள்ள கடை ஒன்றின் களஞ்சியசாலையில் களஞ்

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது செய்திகளைத் தரும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலட்டி மெ.மி.த.க வில் செயற்பட்டு மகிழ்வோம்

யாழ். கலட்டி மெ.மி.த.க பாடசாலையின் 2025 ஆம் ஆண்டிற்கான செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை 6 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் திருமதி சிவானி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய ஆரம்பக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.கணேசலிங்கம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக தொழில் வழிகாட்டல் ஆலோசகர் திருமதி ஜெயவதனி கஸ்ரன் றோய், கௌரவ விருந்தினராக ஓம் சாந்தி நிறுவன இணைப்பாளர் திருமதி சோபநிதி செல்வராசனும் கலந்துகொள்வர். (ம-7)

## இலங்கைக்கு...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடரில் நேற்று முன்தினம் இலங்கை நேரப்படி பி.ப 2.00 மணிக்கு ஆரம்பமான அமர்வில், "இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்" எனும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் அதன் சமகால நிலைவரம் தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் வாய்மொழிமூல அறிக்கை பேரவைத் தலைவரால் வாசிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் இலங்கையில் கடந்த ஆண்டு நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் பரந்துபட்ட மக்கள் ஆணையைப்பெற்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிப் பீடமேறியதாகவும் புதிதாகத் தெரிவான பாராளுமன்றத்தில் ஆற்றிய கொள்கைப் பிரகடன உரையில் நாட்டில் நீண்டகாலமாக நிலவும் பிரிவினைகளைக் களைந்து, இனங்களுக்கு இடையில் தேசிய ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றத் தயாராக இருப்பதாக உறுதியளித்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அதேபோன்று உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை முன்னெடுத்து, நீதியை நிலைநாட்டுவதாக ஜனாதிபதியினால் அளிக்கப்பட்ட வாக்குறுதி குறித்து வரவேற்பு வெளியிடப்பட்டதுடன், இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை முன்னெடுக்கவேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

அதேவேளை உண்மை மற்றும் நீதிக்காக நீண்டகாலமாகப் போராடிவரும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் குறித்து சுட்டிக்காட்டப்பட்டதுடன், அவர்களுக்கான தீர்வை வழங்கக்கூடியவகையில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் செயற்திறனான முறையில் இயங்கவேண்டியது அவசியம் என வலியுறுத்தப்பட்டது.

அத்தோடு பயங்கரவாதத்தடைச்சட்டம் மற்றும் நிகழ்நிலைக்காப்புச்சட்டம் உள்ளிட்ட சட்டங்கள் உரிய நியமங்களுக்கு அமைவாகத் திருத்தியமைக்கப்பட வேண்டும் எனவும் வட, கிழக்கு மாகாணங்களில் சிவில் செயற்பாட்டாளர்கள் மீதான கண்காணிப்புக்கள் தொடர்வதாகத் தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருக்கும் நிலையில் அவை உடனடியாக முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு, சிவில் சமூக செயற்பாடுகளுக்கான இடைவெளி உறுதிப்படுத்தப்படவேண்டும் எனவும் கோரப்பட்டது.

மேலும் நீண்டகாலமாக நிலவிவரும் தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் கலாசாரத்தை முடிவுக்குக்கொண்டுவந்து, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கும் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும் இதுவே சரியான தருணம் எனச் சுட்டிக்காட்டப்பட்டதுடன் அரசாங்கத்தினால் பிரேரிக்கப்பட்டுள்ள உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு செயன்முறை குறித்து வரவேற்பு வெளியிடப்பட்டது. (ம-7)

## செம்மணியில்...

ளது.

சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்டமை தொடர்பான வழக்கினுடைய கலந்தாய்வு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற, நீதவான் ஏ.ஆனந்தராஜா தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பிலும் முறைப்பாட்டாளர் சார்பிலும் சட்டத்தரணிகளும் நல்லூர்ப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மயான அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

குறித்த எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்ட மயானத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு உரிய வகையில் வழங்கப்பட வேண்டும் என்றும் பொலிஸ் பாதுகாப்புக்கு மேலதிகமாக குறித்த மயானத்தினுடைய அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் பாதுகாப்புப் பணியை மேற்பார்வை செய்வதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும் என சட்டத்தரணிகளால் கோரப்பட்டது.

இதனை ஆராய்ந்த நீதவான் மயான அபிவிருத்தி சங்கத்தின் சார்பில் ஐந்து உறுப்பினர்களை பணியில் ஈடுபடுத்த அனுமதி வழங்கினார். (ம-7,33)

## அரச...

யாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் பிரதிப் பிரதானி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மறுசீரமைப்பின் போது வரி செலுத்துவோரைப் பாதிக்காத வகையில் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களை விவேகத்துடன் நிர்வகிப்பது முக்கியம் என அவர் கூறினார். (ம-7)

## செயற்படுத்த...

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், எல்லா அரசாங்கங்களும் தேர்தல் வாக்குறுதிகளை வழங்கி அதிகாரத்துக்கு வந்த பின்னரே அவற்றை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் சிந்திப்பதாகச் சுட்டிக்காட்டிய நாமல் ராஜபக்ஷ,

இதற்குச் சிறந்த உதாரணம் தற்போதைய அரசாங்கம் ஆகும் எனவும் குறிப்பிட்டார்.

செய்ய முடியாத அனைத்து விடயங்கள் தொடர்பிலும் மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்கிவிட்டு அவற்றை நிறைவேற்றுவதில்லை.

செய்ய முடியாத ஒன்றைச் செய்யப் போவதால் எதிர்பார்த்திராத பல பிரச்சினைகளுக்கு அரசாங்கம் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட வாய்ப்புள்ளது.

159 பேரும் தமக்கு அதிகாரம் உள்ளது எனக் கூறிக் கொண்டு யாருக்கும் செவிசாய்க்காமல் தீர்மானங்களை எடுப்பதாக நாமல் எம்.பி தெரவித்தார். (ம-7)


## பாராட்டி வாழ்த்துகிறோம்



**திரு. வே.உதயமோகன்**

யா/ இணுவில் இந்துக் கல்லூரியில் அதிபராக சிறந்த முறையில் கடமையாற்றியமைக்கு நன்றி தெரிவிப்புடன் 03.03.2025 அன்று யா/ ஹாட்லிக் கல்லூரிக்கு அதிபராகக் கடமையேற்ற எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய அதிபர் திரு.வே.உதயமோகன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் மனமகிழ்வடைகிறோம்.

Best Wishes!

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ இணுவில் இந்துக் கல்லூரி

(3569)

### புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை

### வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் உற்சவ ஏற்பாடு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் -2025

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 11.04.2025 ஆம் திகதி சிறப்பாக நடைபெற உள்ளது.

பொங்கல் உற்சவ ஒழுங்கமைப்பு மற்றும் ஏற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு. சு. முரளிதரன் அவர்களின் தலைமையில் எதிர்வரும் 07.03.2025 ஆம் திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

குறித்த ஆலோசனைக் கூட்டத்திற்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள், உற்சவ கால உபயகாரர்கள் மற்றும் தர்மகர்த்தாக்கள், உற்சவகால பணியில் ஈடுபடும் தொண்டர்கள் என அனைவரையும் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கி உதவுமாறு இறையன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர் - க.குகதாசன்
செயலாளர் - தி.பிரபாகரன் 077 317 9847

(C-2374)

### கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்

### பகிரங்க ஏலம் விடுதல்

### ஆலய வயற்காணிகள் சிறுபோகம் - 2025

எமது ஆலயத்திற்குச் சொந்தமான பின்வரும் வயற்காணிகள் 09.03.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளது.

1. மருதநகர் D4 - 2 ¼ ஏக்கர்
2. பெரியபரந்தன் LB2/ D.5 - 10 ஏக்கர்
3. பெரியபரந்தன் D7 - 8 ஏக்கர்

குறிப்பு


- ஒரு ஏக்கருக்கு ஏலம் கூறப்பட்டு மொத்தப் பெறுமதி கணிக்கப்படும்.
- ஏலத்தில் காணியைப் பெறுபவர்கள் அன்றைய தினமே காரியாலயத்தில் முழுப்பணத்தையும் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற வேண்டும். தவறின் அடுத்த ஏலம் கூறிய விவசாயிக்கு உரிமம் மாற்றப்படும்.
- காசோலைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது.

ஆலய பரிபாலன சபை சார்பில்

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| ச.ஸ்ரீகௌரிபாலா | மா.சிவராசா | [illegible] |
| 077 602 7147 | 077 540 7448 | 077 881 0184 |

(C-2372)

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1986 - 08 - 11 | 2025 - 02 - 22 |

### விஜயகுமார் பிரசாத்

(யாழ். மத்திய கல்லூரி 2005ம் ஆண்டு அணி பழைய மாணவன்)

யாழ்ப்பாணம் 188/2 கஸ்தூரியார் வீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயகுமார் பிரசாத் அவர்கள் 22.02.2025 சனிக்கிழமை அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் விஜயகுமார் - சுவர்னா தம்பதியினரின் அன்பு மகனும் சர்மிளா அவர்களின் அன்புக் கணவரும் ஆதிராவின் பாசமிகு தந்தையும் மெல்போனை வசிப்பிடமாகக் கொண்ட பிரவீனாவின் அருமைச் சகோதரனும் ஸ்ரீஹரனின் அன்பு மைத்துனரும் அத்விக்கின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 05.03.2025 புதன்கிழமை ஜேர்மனியில் இந்து முறைப்படி தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : சகோதரி
பிரவீனா-ஸ்ரீ(அவுஸ்திரேலியா)

[illegible]


(C-2375)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின அழிப்பிற்கு நீதி கேட்டு ஐ.நா முன்றலில் கவனயீர்ப்பு

(ஜெனீவா)

**தமிழின அழிப்பிற்கு நீதிகேட்டு ஐ.நா முன்றலில் நடைபெற்ற கவனயீர்ப்புப் போராட்டமானது, ஐக்கிய நாடுகள் மனித உரிமை மன்றத்தின் ஜெனீவா தலைமையக வளாகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பேரெழுச் சியுடன் நடைபெற்றது.**



இப் போராட்டமானது, ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்டு நடத்திவரும் தமிழின அழிப்பிற்கு அனைத்துலக நீதிகோரியும், ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழீழம் விடுவிக்கப்படவேண்டும் என்பதனை வலியுறுத்தியும் ஐரோப்பாவாழ் தமிழ் மக்களின் ஒன்றிணைவுடன் உணர்வெழுச்சியோடு நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை மன்றத்தின் ஜெனீவா தலைமையக வளாகத்தில் அமைந்திருக்கும் ஈகைப் பேரொளி முருகதாசன் திடலில், நூற்றுக் கணக்கானோர் இணைந்து தமிழீழத் தேசியக் கொடிகளையும் பதாகைகளையும் தாங்கியவாறு ஐ.நா வளாகம் அதிர ஒலிகளை எழுப்பி, வேற்றினத்தவரின் அதிக கவனத்தையும் ஈர்த்துள்ளனர்.

சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் அரசியற் பிரிவினராலும், சுவிஸ் தமிழ் இளையோர் அமைப்பாலும் ஐ.நா மன்றத்தின் இலங்கையின் மனித உரிமையை கண் காணிக்கும் உறுப்பினர்களிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (நி-8)

## புதிய விலை நிர்ணய சூத்திரத்திற்கு உடன்பட்ட எரிபொருள் விநியோகஸ்தர்கள்

(கொழும்பு)


இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிமுகப் படுத்திய புதிய விலை நிர்ணய சூத்திரத்திற்கு எரிபொருள் விநியோகஸ்தர்கள் உடன்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவைச் செய்தியாளர் சந்திப்பில் பேசிய ஜெயதிஸ்ஸ இந்த சூத்திரம் இப்போது அமுலில் உள்ளதை உறுதிப்படுத்தினார்.

விநியோகஸ்தர்கள் சமர்ப்பித்த திட்டங்களை மறு ஆய்வு செய்ய மார்ச் 18 ஆம் திகதி மற்றொரு கலந்துரையாடல் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே எரிபொருள் விநியோகம் தொடர்பாக எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.(நி-8)

## வைத்தியர்களின் வேதனம் அதிகரிக்கப்படும் - நளிந்த



(கொழும்பு)

எதிர்காலத்தில் வைத்தியர்களின் வேதனத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனச் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.


நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, வைத்தியர்களுக்கான அடிப்படை வேதனம், மேலதிக சேவைக் குக் கொடுப்பனவு, விடுமுறை நாள் கொடுப்பனவு, வருடாந்த வேதன அதிகரிப்பு மற்றும் உழைக்கும் போதான வரி செலுத்துவதில் நிவாரணம் வழங்கப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந் நிலையில், பொது மக்களைப் பாதிக்கும் வேலைநிறுத்தப் போராட்டத்தை அரச வைத்தியர்கள் ஆரம்பிப்பது ஏற்றுக்கொள்ள முடியாது என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (நி-8)

## நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் விரைவில் திருத்தப்படும்

### உறுதியளித்தார் பாதுகாப்பு அமைச்சர்



(கொழும்பு)

2024 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இணையப் பாதுகாப்புச் சட்டம், விரைவில் திருத்தப்படும் என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இதனை ஆராய்வதற்காக பாதுகாப்பு, ஊடகம் மற்றும் நீதி ஆகிய அமைச்சின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்காக மூன்று அமைச்சகங்களும் இணைந்து ஒரு அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இதுவரை இணைய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் யாரும் கைது செய்யப்படவுமில்லை என்றும் தண்டிக்கப்படவில்லை என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

இலங்கையில் கொண்டுவரப்பட்ட நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான திருத்தத்தை இந்த அரசாங்கம் எப்போது மேற்கொள்ளும் என எதிர்க்கட்சித் தலைவர் கேள்வியெழுப்பியுள்ளார். அதற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனை தெரிவித்தார். (நி-8)

## ஹற்றனில் தீ விபத்து 12 வீடுகள் எரிந்து நாசம்!



(ஹற்றன்)

ஹற்றன், செனன் தோட்டத்தின் கே.எம் பிரிவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு தீ விபத்து ஒன்று ஏற்பட்டுள்ளது.

இந்த தீ விபத்தில் சுமார் 12 வீடுகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனினும், தீ விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. இத் தீ விபத்துக்கான காரணம் மின்சாரக் கசிவு என சந்தேகிக்கப்படுகிறது.

இதேவேளை இந்தத் தீ விபத்தினால் தோட்டத் தொழிலாளர்களின் பொருட்கள் மற்றும் உடைமைகள் தீக்கிரையாகியுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-8)

## போராட்டம் வாபஸ்

### எரிபொருள் விநியோகஸ்தர் சங்கம் முடிவு

(கொழும்பு)

எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் தங்கள் போராட்டத்தை வாபஸ் பெற்றுள்ளது. மேலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருள் விநியோகத்தை மீண்டும் வழங்க முடிவு செய்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை இந்த முடிவு எடுக்கப்பட்டதாக எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கத்தின் துணைத் தலைவர் குசும் சந்தநாயக்க தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

### • வடக்கின் போர் • பொன் அணிகள் போர்

# துடுப்பாட்ட சமர்கள் நாளை ஆரம்பம்



யாழ்.மத்திய கல்லூரி



சென்.ஜோன்ஸ் கல்லூரி


வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரி மற்றும் சென்ஜோன்ஸ் கல்லூரி அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி நாளை வியாழக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

குறித்த இரு கல்லூரிகளுக்கும் இடையேயான 118 ஆவது வடக்கின் பெருஞ்சமர் கிரிக்கெட் போட்டியானது நாளை, நாளை மறுதினம் மற்றும் 8 ஆம் திகதி சனிக்கிழமை வரை என 3 நாட்கள் இடம்பெறவுள்ளன.

கடந்த வருடம் நடைபெற்ற 117 ஆவது வடக்கின் பெரும்போர் போட்டியில் சென்ஜோன்ஸ் கல்லூரி 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)



சென் பற்றிக்ஸ் கல்லூரி



வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி


பொன் அணிகளின் போர் என வர்ணிக்கப்படும் சென் பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டித் தொடர் நாளை வியாழக்கிழமை சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

குறித்த இரு கல்லூரிகளுக்கும் இடையேயான 108 ஆவது பொன் அணிகள் போரின் கிரிக்கெட் போட்டியானது நாளை, நாளை மறுதினம் மற்றும் 8 ஆம் திகதி சனிக்கிழமை வரை என 3 நாட்கள் இடம்பெறவுள்ளன.

இது வரை காலமும் நடைபெற்ற இரு நாள் போட்டிகளில் சென் பற்றிக்ஸ் கல்லூரி 35, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 16 தடவைகள் என வெற்றி பெற்றுள்ளன. 31 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததுடன் ஒருபோட்டி கைவிடப்பட்டது.

சென் பற்றிக் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் முகமாக இவ் ஆண்டு பொன் அணிகளின் போர் 3 நாட்கள் போட்டியாக நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# கிண்ணத்தை சுவீகரித்தது நெல்லியடி மத்திய கல்லூரி



பரபரப்பான ஆட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி ஆசிரியர்கள் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர்கள் அணி மற்றும் நெல்லியடி மத்திய கல்லூரி ஆசிரியர்கள் அணிகளுக்கு இடையிலான ரட்ணசபாபதி கிண்ணத்திற்கான கால்பந்தாட்ட போட்டி கடந்த சனிக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் சம பலத்துடன் மோதினர். இதனால் இரு அணிகளாலும் கோல் எதனையும் பதிவு செய்ய முடியவில்லை. இரண்டாவது பாதியாட்டத்திலும் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர். இதனால் ஆட்ட நேரம் முடிவடையும் வரை இரு அணிகளாலும் கோல் எதனையும் பதிவு செய்ய முடியவில்லை. இதனால் சமநிலைத் தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதில் நெல்லியடி மத்திய கல்லூரி ஆசிரியர்கள் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (6-8-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடளாவிய ரீதியில் பல்கலை கல்விசாரா ஊழியர்கள் கவனயீர்ப்பு



(கொழும்பு)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தற்போதைய அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தில் தமக்கு வழங்கப்பட்டு வருகின்ற கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டுள்ளதாகவும் ஆளணி பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படவில்லை எனவும் தெரிவித்து குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த காலத்தில் தமக்கு வழங்கப்பட்டு வந்த சில கொடுப்பனவுகள் இம்முறை வரவு-செலவு திட்டத்தில் அதிரடியாக குறைக்கப்பட்டு இருப்பதாகவும், சம்பள உயர்வு என்ற பெயரில் தமக்கான சம்பளம் குறைப்பு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர்கள் குற்றம் சாட்டி இருந்தனர்.

நாடளாவிய ரீதியில் உள்ள பல்கலைக்கழக வாயிலில் நேற்று 12 மணிக்கு ஆரம்பமான கவனயீர்ப்பு போராட்டம் ஒரு மணி வரை முன்னெடுக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-33-250)





## பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை
## பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

எமது பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமையலுவலகம், உபஅலுவலகங்கள், ஆயுள் வேதமருந்தகங்கள், நூலகங்கள் ஆகியவற்றிலுள்ள பயன்படுத்திய மேசை, மின்உபகரணப் பொருட்கள், பழைய பத்திரிகைகள், வாகன பற்றரி மற்றும் வாகன ரயர் ஆகிய பொருட்கள் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது.

**ஏல விற்பனை நடைபெறும் திகதி** :- 18.03.2025

**ஏல விற்பனை நடைபெறும் நேரம்** :- மு.ப 10.00 மணி

**ஏல விற்பனை நடைபெறும் இடம்** :-தலைமையலுவலகம், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை

**நிபந்தனைகள்**

1. ஏலதாரராக கலந்து கொள்பவர் ரூபா 100.00 மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக செலுத்துவதுடன் ரூபா 500.00 மீளளிக்கக் கூடிய வைப்புப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்.
2. சித்தியடைந்த ஏலதாரர் அன்றைய தினமே ஒப்புக்கொண்ட ஏலத்தொகையின் முழுத் தொகையினையும் செலுத்திப் பொருட்களை அலுவலகத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்.
3. உரிய பொருட்களை பார்வையிட விரும்புவோர் மற்றும் மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் அலுவலகக் கடமை நேர நாட்களில் காலை 8.30 முதல் மாலை 4.15 வரை தொடர்பு கொள்ளலாம்.
4. மேலதிக நிபந்தனைக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

**த.தர்சினி,**
**செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,**

(C-2376)

**05.03.2025.**


## மணிவிழா

(யாழ்ப்பாணம்)

யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரியின் அதிபர் இ. ரவிச்சந்திரனின் மணிவிழா நிகழ்வு நாளை வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு கல்லூரியின் தர்மகுலசிங்கம் நூற்றாண்டு விழா மண்டபத்தில் கல்லூரியின் உப அதிபர் திருமதி ஜெ. தவசீலன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (6-8)



வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் நீருயிர்வள தொழில்நுட்ப பாடம் கற்கும் தரம் 11 மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கடல்புல் தொடர்பான விழிப்புணர்வு வினாடிவினாப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று வலிகாமம் கல்வி வலயத்தின் மாநாட்டு மண்டபத்தில் தொழில்நுட்ப பாட உதவிக் கல்வி பணிப்பாளர் திருமதி நளாயினி வசந்தன் தலைமையில் இடம்பெற்றது . (படம்-சிவசாந்தன்)

## இராசிபலன்

05.03.2025
மாசி 21, புதன்கிழமை
சஷ்டி மாலை 6.05 மணி வரை
கார்த்திகை பின்னிரவு5.58மணிவரை

பரணி முற்பல்7.26 மணிவரை
சுபநேரம்04.56- 06.26மணிவரை
இராகுகாலம் 12.26-1.56ணிவரை
சஷ்டி விரதம்ஶ்ரீ, விபூதிப்புதன்,கார்த்திகை

விரதம்,
சித்தாமிர்தம்
சந்திராஷ்டமம்- சித்திரை

**வளவன்**

**மேஷம்** – தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** – உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனம் கண்டு கொள்வீர்கள், வழி பாட்டில் நம்பிக்கை கூடும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு

**மிதுனம்** – எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**கடகம்** – பயணங்கள் கை கூடும் வாய்ப்புண்டு, ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், பணப்பழக்கம் அதிகரிக்கும் நாள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**சிம்மம்** – எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், தூர தேசத்தில் இருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், உற்சாகமான நாள்.

**கன்னி** – சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காட்டும் நாள், பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவார்கள்,புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**துலாம்** – சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்** – சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**தனுசு** – கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வியாபார விரோதம் விலகும், உடல் நலனில் முன்னேற்றமுண்டு.

**மகரம்** – ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்ட வர்கள் மனம் மாறுவர், பிள்ளைகளின் நீண்ட நாளைய விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** – வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தொலைபேசி வழயில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**மீனம்** – தொழில் முயற்சியில் எதிர்பார்த்த திருப்பங்களைக் காணலாம், பகைவிலகி பாசம் கூடும் நாள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், கௌரவமான நாள்.

**தக்க சமயத்தில் எச்சரிப்பவனே உண்மையான நண்பன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையை ஒழிப்போம் நல்ல பாதையை வகுப்போம்

## நெடுந்தீவில் மக்கள் கவனயீர்ப்பு



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுப் பகுதியில் இயங்கி வரும் விடுதி ஒன்றில் புதிதாக இயங்கவுள்ள மதுபான சாலையின் அனுமதியினை இரத்து செய்யக்கோரி பொது மக்கள் நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

100 இற்கு மேற்பட்ட பொது மக்கள் இணைந்து நெடுந்தீவு பிரதேச செயலகத்திற்கு முன்பாக நின்று குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர்

போதையை ஒழிப்போம் நல்ல பாதையை வகுப்போம், எமது குடும்ப விளக்கை அணைத்து விடாதே போன்ற பதாகைகளைத் தாங்கியவாறு கோஷம் எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த மதுபானசாலைக்கு அருகில் 100 மீற்றர் தூரத்தில் பாடசாலை, கோவில்கள் என்பன அமைந்துள்ளதால் அப் பகுதிக்கு மதுபானசாலை அனுமதிவேண்டாம் எனவும் பொது மக்கள் வலியுறுத்தியிருந்தனர்.

இது தொடர்பில் ஏற்கனவே பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்தமையால் மதுவரித் திணைக்களம் தற்காலிக அனுமதி வழங்கியது.

குறித்த அனுமதியை நீடிப்பதா இல்லையா என்பது தொடர்பில் பிரதேச செயலகம் மற்றும் மதுவரித் திணைக்களத்திற்கு இடையில் நேற்று பிரதேச செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்நிலையில் குறித்த அனுமதியினை முழுமையாக இரத்து செய்ய வேண்டும் எனக் கோரி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

## செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

யா/கலட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை வியாழக்கிழமை பி.ப 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

பாடசாலை முதல்வர் திருமதி. சிவானி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆரம்பக்கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.கணேசலிங்கம், சிறப்பு விருந்தினராக தொழில் வழிகாட்டல் ஆலோசகர் திருமதி. ஜெயவதனி கஸ்ரன் றோய் மற்றும் கௌரவ விருந்தினராக ஓம் சாந்தி நிறுவன இணைப்பாளர் திருமதி. சோபநிதி செல்வராசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-8)

## வளவாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையினரால் நடத்தப்படும் அறநெறி, பண்ணிசை, மிருதங்கம் ஆகியவற்றுக்கான கற்கை நெறிகள் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட பாடநெறிகளைக் கற்பிக்க ஆர்வமுடைய வளவாளர்கள், ஆசிரியர்கள் தங்களது சுயவிபரங்களை வட்ஸ்அப்-077 789 5716 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு யாழ். சைவபரிபாலன சபையின் செயலாளர் அறிவித்துள்ளார். (6-8)

# 123 கிலோ கேரள கஞ்சா வத்திராயனில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் 123 கிலோ நிறை எடையுடைய கேரள கஞ்சா நேற்று முன்தினம் இரவு கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வெற்றிலைக்கேணி கடற்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து பொலிஸ் விசேட அதிரடிப் படையினருடன் வத்திராயன் கடற்கரைப்பகுதி கடற்படையினரும் இணைந்து முன்னெடுத்த திடீர் சுற்றிவளைப்பின் போதே கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இதன் போது 123 கிலோ நிறை எடையுடைய கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பாக யாரும் கைது செய்யப்படவில்லை. மீட்கப்பட்ட கேரள கஞ்சா மேலதிக சட்ட நடவடிக்கைக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (6-8)

# வடமராட்சி ஊடக மையத்திற்கு பிறிட்டோ பெர்னாண்டோ விஜயம்



(கரணவாய்)

மனித உரிமைகள் செயற்பாட்டாளர் பிறிட்டோ பெர்னாண்டோ நேற்று முன்தினம் யாழ் வடமராட்சி ஊடக மையத்திற்கு விஜயம் மேற்கொண்டு கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

"வல்வெட்டித்துறை ஒரு படுகொலையின் வாக்குமூலங்கள்" அறிக்கை வெளியீட்டு நிகழ்விற்காக வடமராட்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த மனித உரிமைகள் செயற்பாட்டாளர் பிறிட்டோ பெர்னாண்டோ வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது விவகாரம் உள்ளிட்ட நீதிகோரும் விடயங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினருடன் பிரத்தியேக கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார். இதன் போது மனித உரிமைகள் மற்றும் சமூக செயற்பாட்டாளரான நிலஷனியும் பங்கேற்று இருந்தார். (6-8-60)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3292

டாருஸ்




சஸ்விகன்




சாதுமிரா




விகாஸ்




வைசாலி




சஞ்சீவ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருவோடு ஏந்தி
## ராமேஸ்வரத்தில் போராட்டம்



(சென்னை)

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும், அந்நாட்டு கடற்படையால் கைப்பற்றப்பட்ட படகுகளையும் விடுவிக்க வலியுறுத்தி இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் தங்கச்சிமடத்தில் நேற்று முன்தினம் திருவோடு ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை கடற்படையால் கடந்த ஜனவரி முதல் 18 படகுகள் சிறைப்பிடிக்கப்பட்டு 131 தமிழக மீனவர்களும் கைது செய்யப்பட்டனர்.

மேலும், 38 மீனவர்கள் தண்டனை பெற்று அங்குள்ள சிறைகளில் உள்ளனர். மேலும், தமிழகத்தைச் சேர்ந்த 42 மீனவர்கள், புதுச்சேரி மாநிலம் காரைக்காலைச் சேர்ந்த 13 மீனவர்கள் நீதிமன்றக் காவலில் சிறைகளில் அடைக்கப் பட்டுள்ளனர்.

இலங்கை சிறைகளில் உள்ள மீனவர்களையும், படகுகளையும் நிபந்தனையின்றி விடுவிக்க வலியுறுத்தி இராமேஸ்வரம் மீனவர்கள் பெப்ரவரி 24 முதல் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) 4 ஆவது நாள் போராட்டத்தில் இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் திருவோடு ஏந்தி போராட்டம் நடத்தினர். (நி-8)


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

எமது சபையின் பாவனையில் இருந்து நீக்கப்பட்ட தளபாடங்கள், வாகன ரயர்கள், வாகன பற்றறிகள், வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது.

**காலம் :- 21.03.2025 வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணி**
**இடம் :- தலைமை அலுவலகம், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**

**நிபந்தனைகள்**

1. ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 2000.00 இனையும் மீளளிக்க முடியாத படிவக் கட்டணமாக ரூபா 100.00 இனையும் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். உரிய கட்டணங்கள் செலுத்தாதோர் ஏல விற்பனையில் பங்குபற்ற முடியாது.
2. விண்ணப்பப்படிவம் 2025.03.21 ஆம் திகதி மு.ப.8.30 மணி தொடக்கம் மு.ப 10.15 மணி வரையே வழங்கப்படும். அதன் பின்னர் எக்காரணம் கொண்டும் விண்ணப்பப்படிவம் வழங்கப்படமாட்டாது.
3. சித்தியடைந்த ஏலதாரர் அன்றைய தினமே தங்களால் கோரப்பட்ட ஏலத்தொகையின் முழுத் தொகையையும் செலுத்தி பொருட்களை அலுவலகத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.
4. விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களினையும் அதன் விபரத்தினையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அனுமதி பெற்று பார்வையிட முடியும்.
5. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது 021-205 8986 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டும் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-2371)

**செயலாளர்,வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,புத்தூர்.** 2025.03.05



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## பட்டதாரிக் கற்கைகள் பீடம்

### புதிய அனுமதி

தூய சக்தித் தொழில்நுட்பங்களில் முதுமாணி (அணி II) & தூய சக்தித் தொழில்நுட்பங்களில் விஞ்ஞான முதுமாணி (அணி II)


மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களை பட்டதாரிக் கற்கைகள் பீடத்தின் வலைத்தளத்தில் (www.grad.jfn.ac.lk) பார்வையிடலாம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 28.03.2025**
மேலதிக தொடர்புகளுக்கு 021222 3608

**பதிவாளர்** (சி-2370)



## 1000 முக்கியஸ்தர்களை கௌரவித்து பொன்னாடை அணிவிக்கும் சாதனை



கல்வி,கலை,கலாசாரம்,விளையாட்டு போன்ற பல துறைகளில் சாதிப்பவர்களை கௌரவிக்க வேண்டும். இந்த நல்ல சிந்தனையில் 1000 முக்கியஸ்தர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கும் ஒரு புதிய சாதனை ஒன்றை ஆரம்பித்துள்ளார் **கலாபூஷணம் பரீட் இக்பால்.** உலகில் பலர் பல சாதனைகளை நிகழ்த்தி வரும் கால கட்டத்தில் இவரது சாதனையும் வெற்றியளிக்க வாழ்த்துக்கள்.

**யாழ்.முஸ்லிம் சமூக ஊடகம்.** (சி-2369)



## மணிவிழா வாழ்த்துக்கள்

**05.03.2025**



திரு. **இரத்தினம் ரவிச்சந்திரன்**
(அதிபர் யா/உடுப்பிராய் இந்துக்கல்லூரி)
(Spl.Trained(Maths)B.A,Dip.in.Edu,MED, PGDEM,SLPS-1)

உரும்பிராய் இந்துவின் அதிபராய்
ஏற்றமுறு பணிகள் இயற்றிய செயல்வீரா!
கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன்
கசக்கும் கணிதமதை கனிவாய் கற்பித்து
மாணவர் போற்றும் மாண்புறு ஆசானாய்,
பட்டங்கள் பல பெற்று பண்பு நிறை
அதிபராய் இணையில்லாச் சேவையால்
இன்புற்ற மணிவிழா நாயகனே!
வாழ்க! வாழ்க! வாழ்க!

வாழ்த்துவோர்

- திரு.ந.கந்தவனச்செல்வன் (அதிபர், யா/செங்குந்தா இந்துக் கல்லூரி)
- திரு.அ.ஆனந்தராசா (அதிபர், யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்)
- திரு.கு.திலீபன் (அதிபர், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்)
- திரு.ப.சுதானந்தராஜா (அதிபர்,யா/தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை)
- திரு.க.செந்தில்வடிவேல் (பிரதி அதிபர், யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)
- திரு.ப.கணேசன்(பிரதிக்கல்விப் பணிப்பாளர் வலயக் கல்வி அலுவலகம்,முல்லைத்தீவு)
- திரு.கு.விமலன் (ஓய்வு நிலை அதிபர், யா/காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி)


(3561)

Best Wishes


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ட்ரம்பின் வர்த்தக வரிகளுக்கு சீனா, கனடா, மெக்சிக்கோ பதிலடி



(வோஷிங்டன்)

மெக்சிக்கோ மற்றும் கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் புதிய 25% வரிகள் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் அமுலுக்கு வந்தன.

அத்தோடு சீனப் பொருட்களுக்கான வரிகளை 20% ஆக இரட்டிப்பாக்கி, அமெரிக்காவின் முதல் மூன்று வர்த்தக பங்காளிகளுடன் புதிய வர்த்தக மோதல்கள் ஆரம்பமாகியுள்ளன.

இந்த வரி விதிப்புக்குப் பின்னர் அமெரிக்காவிற்கு எதிராக பதிலடி நடவடிக்கைகளை சீனா, கனடா மற்றும் மெக்சிக்கோ ஆகியவை அறிவித்துள்ளன.

மார்ச் 10 முதல் சில அமெரிக்க இறக்குமதிகள் மீது 10%-15% கூடுதல் வரிகளை சீனா விதித்தது மற்றும் நியமிக்கப்பட்ட அமெரிக்க நிறுவனங்களுக்கு தொடர்ச்சியான புதிய ஏற்றுமதி கட்டுப்பாடுகளையும் அறிவித்தது.

மூன்று தசாப்தங்களாக அமெரிக்காவுடன் கிட்டத்தட்ட வரி இல்லாத வர்த்தக உறவை அனுபவித்து வரும் கனடாவும் மெக்சிகோவும், தங்கள் நீண்ட கால கூட்டாளிக்கு எதிராக உடனடியாகப் பதிலடி கொடுக்கத் தயாராக இருந்தன.

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஒட்டாவா, அமெரிக்க இறக்குமதி பொருட்களுக்கு உடனடியாக 25% வரிகளை விதிக்கும் என்றும், ட்ரம்பின் வரிகள் 21 நாட்களுக்குள் அமுலில் இருந்தால் மேலும் 125 பில்லியன் கனேடியன் டொலர் வரிகளை கனடா விதிக்கும் என்றும் தெரிவித்தார்.

அதேநேரம், கட்டணங்கள் நம்பமுடியாத அளவிற்கு வெற்றிகரமான வர்த்தக உறவை சீர்குலைக்கும். அவை ட்ரம்ப் தனது முதல் பதவிக் காலத்தில் கையெழுத்திட்ட அமெரிக்க-மெக்சிகோ-கனடா சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை மீறும் என்றும் ட்ரூடோ குறிப்பிட்டார்.

இதேவேளை, அமெரிக்காவின் வரி விதிப்புக்கு எதிரான தமது பதிலை விரைவில்மெக்சிகன் ஜனாதிபதி கிளாடியா ஷீன்பாம் அளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுவதாக அந் நாட்டு பொருளாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. ( நி-8)

# இடைநிறுத்த...
# உக்ரைனுக்கா...

## ட்ரம்ப் அதிரடி அறிவி...

**(வோஷிங்டன்) —**
**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உக்... இராணுவ உதவியை இடைநிறுத்தியுள்ளார்.**

உக்ரைன் ஜனாதிபதி வோலொடிமிர் ஜெலன்ஸ்கியுடன் கடந்த வாரம் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

இது ஒரு காலத்தில் நட்பு நாடுகளாக இருந்த இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள விரிசலை மேலும் ஆழமாக்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட உதவியின் நோக்கம், அளவு மற்றும் இடை நிறுத்தம் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது குறித்து வெள்ளை மாளிகை உடனடிக் கருத்து எதுவும் தெரிவிக்க வில்லை.

அமெரிக்க ஜனாதிபதியின் இந்தக் கருத்துக்கான ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவையின் கோரிக்கைக்கு ஜெலன்ஸ்கியின் அலுவலகமோ அல்லது வோஷிங்டனில் உள்ள உக்ரைனியத் தூதரகமோ உடனடியாகப் பதிலளிக்கவில்லை.


கடந்த ஜனவரி மாதம் ட்ரம்ப் பதவியேற்றதும் உக்ரைன் மற்றும் ரஷ்யா மீதான அமெரிக்கக் கொள்கையை மாற்றியமைத்து, மொஸ்கோவை நோக்கி மிகவும் இணக்கமான நிலைப்பாட்டை எட்டினார்.

இதையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை வெள்ளை மாளிகையில் ஜெலென்ஸ்கியுடன் மேற்கொண்ட சந்திப்பின் போது ஏற்பட்ட மோதலுக்குப் பின்னர், ரஷ்யாவுடனான போரில் வோஷிங்டனின் ஆதரவிற்கு போதுமான நன்றியுணர்வு உக்ரைனிய ஜனாதிபதிக்கு இல்லை

## 2 மில்லியன் குழந்தைகளின் உயிரை காத்த மாமனிதர் உயிரிழப்பு

(கன்பெரா)

இரத்தத்தில் உள்ள திரவப் பொருளான பிளாஸ்மா தானம் மூலம் மில்லியன் கணக்கான குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றிய பிரபல அவுஸ்திரேலிய இரத்த தானம் வழங்குநர் ஜேம்ஸ் ஹாரிசன் காலமானார்.



ஜேம்ஸ் ஹாரிசன் பெப்ரவரி 17 அன்று அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸில் உள்ள ஒரு முதியோர் இல்லத்தில் தூக்கத்தில் இறந்தார் என்று அவரது குடும்பத்தினர் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

இறக்கும் போது அவருக்கு வயது 88. அவுஸ்திரேலியாவில் தங்கக்கரம் கொண்ட மாமனிதர் என்று அழைக்கப்படும் ஹாரிசனின் இரத்தத்தில் ஒரு அரிய நோய் எதிர்ப்பு திரவம் உள்ளது.

இது, கருவில் உள்ள குழந்தைகளைத் தாக்கும் அபாயம் உள்ள கர்ப் பிணித் தாய்மார்களுக்கு மருந்து தயாரிக்கப்பயன் படுகிறது.

ஹாரிசனுக்கு அஞ்சலி செலுத்திய அவுஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்க இரத்த சேவை தெரிவிக்கையில், அவர் 14 வயதில் மார்பு அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட போது இரத்தமேற்றுதலைப் பெற்ற பின்னர் நன்கொடை யாக மாறுவதாக உறுதியளித்தார்.


அவர் 18 வயதில் தனது இரத்த பிளாஸ்மாவை தானம் செய்யத் தொடங்கினார், மேலும் 81 வயது வரை இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை அந்தப் பணியைத் தொடர்ந்து செய்தார் என்று தெரிவித்தது.

2005 ஆம் ஆண்டில், அதிக இரத்த பிளாஸ்மா தானம் செய்யப்பட்டவர் என்ற உலக சாதனையை அவர் பெற்று அந்தப் பெருமையை 2022 ஆம் ஆண்டு வரை பாதுகாத்தார்.

ஹாரிசன் அவரது வாழ்நாள் முழுவதும் 1173 முறை நன்கொடை அளித்து இரண்டு மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றியமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

## வடகொரியாவுக்... செயலில் இறங்...

### அமெரிக்காவின் செயற்பாட்டா...



(பியாங்யாங்)

வடகொரியாவுக்கும், தென் கொரியாவுக்கும் இடையே நீண்டகாலமாக பகை இருந்து வருகின்றது. இதனால் வடகொரியா கடந்த சில ஆண்டுகளாக அடிக்கடி ஏவுகணை சோதனைகளை ந... கொரியாவை... வருகின்றது.

வடகொரி... ளிக்க ... அமெரிக்காவ... த்து வருகின்... பகுதியில் இரு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ந்தப்பட்டது


# கான உதவி!

## றிவிப்பு

### ம்ப் உக்ரைனுக்கான ர்.

மாற்றிய
கோவை
இணக்க
டை எட்டி

ந்த வெள்
ளை மாளி
ஸ்கியுடன்
ந்திப்பின்
ாதலுக்குப்
வுடனான
ங்டனின்
ாதுமான
க் ரைனிய
இல்லை




என்று ட்ரம்ப் விமர்சித்தார். இதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமித்ததிலிருந்து நிதி மற்றும் இராணுவ உதவி யாக அமெரிக்கா வழங்கிய பல்லாயிரக்கணக்கான பில்லியன் டொலர்களில் சிலவற்றைத் திரும்பப் பெறுவதற்கான ஒரு வழியாக கனிம ஒப்பந்தத்தை ட்ரம்ப் நிர்வாகம் கருதுகிறது.

டிசம்பரில், பதவியில் இருந்து விலகுவதற்கு சற்று முன்பு கூட முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன் பாதுகாப்பு மற்றும் பட்ஜெட் உதவியாக கூடுதலாக 5.9 பில்லியன் டொலர்களை அறிவித்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி-8)

# பாவுக்கு ஆத்திரமூட்டும் இறங்கிய தென்கொரியா

## சயற்பாட்டால் பதற்றத்தில் கொரிய தீபகற்பம்



களை நடத்தி தென்கொரியாவை அச்சுறுத்தி வருகின்றது.

வடகொரியாவைச் சமாளிக்க தென்கொரியா அமெரிக்காவுடன் கைகோர்த்து வருகின்றது. தீபகற்பப் பகுதியில் இரு நாட்டுக் கூட்டுப் படைகளும் அவ்வப்போது பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

தென்கொரியாவில் சக்தி வாய்ந்த இராணுவத் தளம் ஒன்று அமைப்பதற்கான முயற்சியில் அமெரிக்கா இறங்கி உள்ளது. இந்த இராணுவத் தளத்தால் தங்களுக்கு அச்சுறுத்தல் வரலாம் என வடகொரியா கருதுகின்றது.

இந்த நிலையில் சில நாட்களுக்கு முன்பு அமெரிக்காவின் அதிநவீன விமானம் தாங்கிய போர்க்கப்பல் ஒன்று தென்கொரியாவுக்கு வந்துள்ளது.

வடகொரியா இந்த ஆண்டு இதுவரை 4 ஏவுகணைச் சோதனைகளை நடத்தி உள்ள நிலையில் அமெரிக்கப் போர்க்கப்பல் தென்கொரியாவுக்கு வந்துள்ளது வட கொரியாவுக்கு கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் இந்த நடவடிக்கை வட கொரியாவை நேரடியாகப் பாதிக்கும் அபாய சூழ்நிலை நிலவுகின்றது.

இதனையடுத்து அமெரிக்காவுக்கு வட கொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது. அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் சகோதரியும், சக்தி வாய்ந்த தலைவர்களில் ஒருவருமான ஜிம்யோ ஜாங்கின் அமெரிக்காவுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவை எச்சரிக்கும் வகையில் வட கொரியா கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் மற்றும் இலக்குகளைக் குறிபார்த்து தாக்ககூடிய ஏவுகணைச் சோதனைகளை நடத்தலாம் என தகவல்கள் வெளியாகி இருக்கிறது. இதனால் தீபகற்ப கொரிய பகுதியில் பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது. (நி-8)

# நம்பினால் நம்புங்கள்!

# 20 மனைவிகளுடன் மகிழ்ச்சியாக வாழும் மனிதர்



(தன்சானியா)

தான்சானியா நாட்டைச் சேர்ந்த ஒருவர் 20 மனைவிகளுடன் வாழ்ந்து வருகின்றார். பழங்குடியினத்தில் திருமணத்திற்குத் தடையில்லாததின் காரணத்தினால் அவர் 20 திருமணங்களைச்செய்து கொண்டதாகத் தெரிய வருகின்றது.

கபிங்கா எனப் பெயர் கொண்ட நபர் 20 மனைவிகளுடன் ஒரே வீட்டில் தகராறு இல்லாமல் வாழ்ந்து வருகின்றார்.

அவருக்கு ஆண்களும் பெண்களுமாக 104 பிள்ளைகளும் 144 பேரன் போர்த்திகளும் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. (நி-8)

# உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்

(வோஷிங்டன்)

உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்காவின் பல நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

நியூயோர்க், லொஸ் ஏஞ்சல்ஸ், பொஸ்டன் உட்பட பல நகரங்களில் இடம்பெற்ற இந்த உக்ரைன் ஆதரவு ஆர்ப்பாட்டங்களில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கும் உக்ரைன் ஜனாதிபதி வோலொடிமிர் ஜெலன்ஸ்கிக்கும் இடையில் வெள்ளை மாளிகையில் சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம் உடன் உப ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ், இராஜாங்க செயலாளர் உள்ளிட்டோர் பங்குபற்றினர்.

இச்சமயம் ட்ரம்ப், ஜே.டி. வான்ஸ் ஆகியோர் ஜெலன்ஸ்கியுடன் கோபமாகப் பேசியதைத் தொடர்ந்து அமெரிக்கா முழுவதும் உக்ரைன் ஆதரவாளர்களால் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, அமெரிக்க உப ஜனாதிபதி வான்ஸூம் அவரது குடும்பத்தினரும் விடுமுறைக்காக ஸ்கை விடுதிக்கு வருகை தந்திருந்ததை அறிந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் வெர்மான்ட்டின் வெயிட்ஸ்ஃபீல்டில் உள்ள வீதியிலும் உக்ரைன் ஆதரவு பதாகைகளை ஏந்தியவாறு வரிசையில் நின்றனர்.

அதனால் அமெரிக்க உப ஜனாதிபதியும் குடும்பத் தினரும் தாங்கள் திட்டமிட்ட விடுதியிலிருந்து வேறு இடத்திற்கு இடம்பெயர்ந்ததாக அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (நி-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்பத்தி நிலையங்களிற்கு விஜயம் செய்த இளங்குமரன் எம்.பி



(கிளிநொச்சி)

பரந்தன் இரசாயனக் கூட்டுத் தாபனம் மற்றும் ஆனையிறவு உப்பளம் ஆகிய இடங்களுக்குப் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன் போது கிளிநொச்சி மாவட்டபதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன், கண்டாவளை பிரதேச செயலாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நவீன வசதிகளுடன் அமைக்கப்படும் ஆனையிறவு உப்பு உற்பத்தி குறித்த கட்டடத்தைப் பார்வையிட்டார். தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், கைத்தொழில் அமைச்சர் நாளை மறுதினம் யாழ்ப்பாணம் வருகை தர இருக்கின்றார். அதனுடன் பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம் மற்றும் ஆனையிறவு உப்பளத்திற்கும் வருகை தரவுள்ளார்.

அவரின் விஜயம் தொடர்பான முன்னாயத்த விடயங்களை பார்வையிட இன்றைய கள விஜயம் அமைந்தது. ஆனையிறவு உப்பள நிலையத்தில் கடந்த காலங்களில் உப்பு உற்பத்திகளை முடிவுப்பொருளாக முன்பே வேறு தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பட்டன.

நாங்கள் அதனை முடிவுப்பொருளாக்கி விற்பனை செய்வதன் மூலம் அதிக இலாபம் ஈட்டுவதுடன், இவற்றின் ஊடாக இப் பிரதேசத்தைச் சார்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க முடியும் என தெரிவித்தார். (6-8)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 120 | 180 | 130 |
| உருளைக்கிழங்கு | 180 | 150 | 180 | 160 |
| பச்சைமிளகாய் | 1200 | 1100 | 1400 | 900-1000 |
| தக்காளி | 120 | 100 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 250 | 150-200 |
| கோவா | 300 | 250 | 300 | 250 |
| கரட் | 800 | 750-900 | 800 | 850 |
| பூசணி | 120 | 140 | 120 | 80 |
| புடோல் | 150 | 150 | 180 | 130 |
| வாழைக்காய் | 120 | 100 | 120 | 80-120 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 350 | 150-300 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 180 | 145 |
| பாகற்காய் | 450 | 400 | 400 | 350-400 |
| வெண்டக்காய் | 250 | 350 | 300 | 300 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 200 | 150 |
| பயற்றங்காய் | 250 | 200 | 250 | 250 |
| லீக்ஸ் | 350 | 400 | 350 | 250 |
| பீற்றூட் | 300 | 200 | 200 | 150 |
| கறிமிளகாய் | 600 | 700 | 600 | 400-600 |
| முருங்கைக்காய் | -- | 2500 | 2400 | 2000 |
| போஞ்சி | 100 | 200 | 200 | 150 |
| கத்தரிதம்புள்ள | 50 | 80 | 120 | -- |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 60 | 60-70 |
| தேசிக்காய் | 200 | 150 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 250 | 200 | 150-250 |
| இராசவள்ளி | 500 | 400 | 500 | 400 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 100 | 50-100 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 85 | 130 | 100 |
| வல்லாரை | 60 | 70 | 70 | 50 |
| ஈரப்பலா | • 100 | 120 | 100 | 100 |

# இன்று ஒரு தகவல் 334

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## விழித்திரை அடையாளம்!

ஒருவரை அடையாளம் கண்டுபிடிப்பதற்கான சுலபமான வழி என்ன?

முகத்தைப் பார்த்து கண்டுபிடிப்பது தான். ஆனால் மனிதன் தவறு செய்ய ஆரம்பிக்கும் போது கண்டுபிடிக்க வேறு வழிகளைக் கையாள வேண்டியிருக்கிறது.

கைரேகை அவருக்கு மிகவும் உபயோகப்படுகிறது. கைரேகை ஒருவருக்கு இருப்பது போல இன்னொருவருக்கு இருப்பதில்லை. பல்வரிசையும் அப்படித்தான். ஏமாற்றுபவர்கள் அதிகமானதால் இருக்கிறவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது.

BioMetrics என்பது ஒரு பெரிய தொழில்நுட்பம். இதை உபயோகப்படுத்தி சில பாதுகாப்பு உத்திகளையெல்லாம் உருவாக்கியிருக்கிறார்கள் அமெரிக்காவில்.

வீட்டுக்கு சொந்தக்காரர் குரல் கொடுத்தால் கதவு திறக்கும் அல்லது அவர் கை வைத்தால் கதவு திறக்கும். மற்றவர்கள் யார் என்ன செய்தாலும் கதவு திறக்காது.

இது எப்படி? அவருடைய குரல் அல்லது கைரேகை எல்லாம் ஒரு எலக்ட்ரோனிக் சாதனத்திலே ஏற்கனே பதிவு செய்யப்பட்டிருக்கும்.

இவர் குரல் கொடுக்கும் போது அல்லது கையை வைக்கும்போது அதை ஒப்பிட்டுப் பார்த்து சரியாக இருந்தால் கதவு திறப்பது போன்று ஒரு ஏற்பாடு இது.

இதே போல் ஒருவரின் விழித்திரையிலே உள்ள இரத்தக் குழாய் அமைப்பைப் பாருங்கள். அதுகூட ஒருவருக்கு இருப்பது மாதிரி இன்னொருவருக்கு இருப்பதில்லை.

அதனாலே அதை வைத்து அடையாளம் கண்டுபிடிக்கக்கூடிய சாதனங்களும் இப்போது பழக்கத்திற்கு வந்துவிட்டது.

கைரேகையை ஒப்பிடும் சாதனங்களை விட விழித்திரை இரத்தக்குழாய் அமைப்பை அடையாளம் காணும் சாதனம் இருக்கு பாருங்கள். இது மிகவும் நுட்பமானது. நம்பத்தகுந்தது. ஒரு ஆளை அடையாளம் காண இது எடுக்கும் நேரம் ஒரு விநாடிதான்.

ஒரு கருவி இருக்கும். அதிலே உள்ள ஒரு சிறு துளையிலே கண்ணை வைத்து பார்க்க வேண்டும். உடனே இந்தச் சாதனம் குறைந்த சக்தி உள்ள அகச்சிவப்பு ஒளியைப் பாய்ச்சி அவரது விழித்திரையின் இரத்தக்குழாய் அமைப்பை ஆராய்ந்து ஏற்கனவே அதன் நினைவுப் பெட்டகத்திலே பதிவுசெய்யப்பட்டிருந்த அமைப்புக்களோடு ஒப்பிட்டுப் பார்த்து சரியான ஆள்தானா? இல்லையா? என்று அடையாளம் காட்டிவிடும்!

குரலை வைத்து அடையாளம் கண்டுபிடிப்பதும் Biometrics முறைகளிலே ஒன்று.

ஒரு நபருடைய குரலை டிஜிற்றல் குறியீடுகளாக மாற்றிப் பதிவு செய்து மீண்டும் அதே குரலை இனங்காணக்கூடிய சாதனங்கள் ஏற்கனவே அமெரிக்காவிலே விற்பனைக்கு வந்துவிட்டது.

ஒரு நபருக்கு ஜலதோஷம் பிடித்திருந்தால் கூட அந்த சாதனம் சரியாக கண்டுபிடித்துவிடும். குரலை மாற்றி பேசுபவர்கள் கூட இந்தக் கருவியை ஏமாற்ற முடியாது. இதை வைத்தியசாலைகள், வங்கிகளிலே உள்ள இரும்புப் பெட்டகக் காப்பறைகள் இங்கேயெல்லாம் உபயோகப்படுத்தலாம். குழந்தைகள் உள்ள இடங்களுக்கு இது மிகவும் உபயோகிக்கப்படும்.

கதவு பூட்டப்பட்டுவிட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். கதவைத் திறக்க சாவியை உபயோகப்படுத்தத் தெரியாத குழந்தைகள் குரல் எழுப்பியே கதவைத் திறந்து விட முடியும்.

எதிர்காலத்திலே இந்த BioMetrics முறை இன்னும் பல ஆச்சரியங்களை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

ஸ்டிரியங்கை தொட்டாலே கார் ஸ்டார்ட் ஆகிவிடும். சாவி தேவையில்லை. கார் சொந்தக்காரர் தொட்டால்தான் ஸ்டார்ட் ஆகும்.

ஒரு மனிதருடைய நடை, அவர் டைப்ரைட்டரை தொடும் விதம் இதையெல்லாம் வைத்துக்கூட ஆளை அடையாளம் காணக்கூடிய தொழில்நுட்பம் வரலாம்.

என்னதான் தொழில்நுட்பம் வளரட்டும். குடும்பத்துக்குள்ளே நடக்கும் திருட்டுக்களைக் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டம் சேர்.

ஒரு வீட்டிலே பெட்டியிலே இருந்த பணம் காணாமல் போய்விட்டது. வீட்டுக்காரரோ அல்லது பையனோ தான் எடுத்திருக்க வேண்டும். பெட்டியைத் திறந்து பார்த்த அந்த வீட்டுக்கார அம்மா இதுலே இருந்த பணத்தை எடுத்தது நிச்சயமாக என் வீட்டுக்காரர் இல்லை அப்படி என்று உறுதியாக சொல்லிவிட்டார். அந்த வீட்டுக்காரருக்கு மிகவும் பெருமை.

அது எப்படி அவ்வளவு கரெக்டா சொல்கிறாய்? என்று அவரே கேட்டார்.

பெட்டியிலே இன்னும் கொஞ்சம் பணம் மிகுதி இருக்கு. அதனாலே அப்படிச் சொன்னேன் என்றார் அந்த அம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய தொழில்நுட்பம் 2025உம் - ஜப்பானிய உதவியும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

விவசாயப் பெருமக்களின் விவசாயம்சார் தொழிற்றுறை எதிர் நோக்கும் சவால்களையும் தெரியப் படுத்தி அவற்றுக்கான தீர்வுகள் பற்றி பிரஸ்தாபித்த விவசாய தொழில்நுட்பம் 2025 இனது முதலாம் பாகம் கடந்த புதன் கிழமை வெளியானதன் தொடர்ச் சியை இங்கு தருகின்றோம். பிரச்சி னைகள் அனைத்தும் அநேகமான மக்கள் எதிர் நோக்குபவையாக இருப்பதனால் அவற்றை ஏனையவர்களும் அறிந்து கொள்ள சுருக்கித் தருகின்றோம்.

நெல் அறுவடை இயந்திரமான கொம்பைன்ட் அருவிவெட்டியைப் பயன்படுத்தும் போது அதிக இழப் புக்கள் ஏற்படுவது அவதானிக் கப்பட்டுள்ளது. அதனால் அதனை பரிசோதிப்பதற்கான தொழில்நுட்ப நிபுணத்துவம் தேவை என கூறப் பட்டது. (பதில்) இதனைக் கவனத்தி லெடுப்பதென்றும் பரிசோதித்து அதன் வினைத்திறனை அதிகரிப் பதற்கான வழிவகைகளை செய் வதாக பதிலிறுத்தப்பட்டது.


வளங்குறைந்த மண்ணுள்ள பிரதேசத்தில் பயன்படுத்தக்கூடிய பேமாகல்ச்சர் என்னும் (permaculture) இயற்கை வழி யாகக் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு மண்ணினை வளப்படுத் துவதற்கான வழிவகைகள் பற்றிய தகவல்கள் அதிகமாக தேவை எனவும் வளங்குறைந்த மண் ணில் எவ்வாறு சிறந்த பயிர்ச் செய்கையை செய்யலாமெனவும் பிரஸ்தாபிக்கப்பட்டது. (பதில்) இதனை ஆய்வுக்குட்படுத்தி மண் ணினை எவ்வாறு வளமான மண் ஆக மாற்றுவதென வினவப்பட்டது. இதுபற்றிய ஆய்வுகளை மேற் கொண்டு வளமான மண்ணினை பெறுவதற்கான வழிவகைகள் ஆராயப்பட்டன.

பயிரின் நீர்த்தேவை பற்றியும் அதற்கான நீர்த்தேவை பற்றிய கணிப்பு, நிலத்தின் பரப்பளவிலும் பயன்படுத்தும் பயிரிலும் தங்கி யிருப்பதாகவும் பிரஸ்தாபிக்கப்பட் டுள்ளது. இதில் பயிருக்கு பாய்ச்சப் படும் நீரின் தரம், நிலத்தடி நீர் மாசு றல் என்பன பற்றி பிரஸ்தாபிக் கப்பட்டது. (பதில்) மெதுவாக வெளிவிடும் பசளைகளை (slow release fertilizer) பயன்படுத்தல் பற்றிக் கூறப்பட்டது. இதற்கும் மேலாக நுண்ணிய நீர்ப்பாச்சுதல் என்பது இதற்கு சாதகமான முறை யாகும்.

அதில் தூவல் நீர்ப்பாசனம் மற்றும் சொட்டு நீர்ப்பாசனம் போன்றனவற்றைப் பயன்படுத்தி நீரிழப்பை தடுக்கும் வழிவகைகள் பற்றி அறியப்பட்டுள்ளது. இவற்றுள் ஆய்வு செய்யவேண்டியவற்றிற்கு ஆய்வு செய்து அவற்றின் பயன் பாட்டை விளக்கப்படும்.

விலங்குகளினாலான சேதத் திற்காக குறிப்பாக யானை மூலமான சேதத்திற்கு வழிசெய்தல் வேண்டு மெனவும் ஏனைய விலங்குகளி னாலான அழிவுகளை குறைப் பதற்கான வழிவகைகளை தரும்படி வினவப்பட்டது. இதற்கு விடையளித்த விவசாய விரிவாக்க பணிப்பாளர் (பதில்) விலங்குகளை கட்டுப்படுத்து வதற்காக பாதுகாப்பு வேலிகளை போடுவதற்காக திட்டங்கள் தீட்டப்பட்டு

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...




அவற்றை நிர்மாணிப்பதற்காக ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தற்போது வவுனியாப் பல் கலைக்கழகத்தில் பணிபுரியும் கலாநிதி விஜயமோகன் அவர்களின் பரிந்துரையுடன் யானை களுக்கான வேலியை உருவாக்கு வதற்கான முயற்சிகளில் முன்னேற் றங்காணப்பட்டுள்ளது. குரங்கு களைக் கட்டுப்படுத்துவது இலகுவான காரியமில்லை. மாதிரி புலியுருவம் பொறித்த டம்மி பொம்மைகளை பயன்படுத்துதல், இன்னும் விலங்கு களினாலான சேதத்தை அவதா னித்து அவற்றை கட்டுப்படுத்து வதற்கான வழிவகைகள் பற்றியும் தகவல்கள் தருவதாகக் கூறப்பட் டது.

காப்பெற் வீதிகளில் காயவிடப்படும் நெல்மணிகளில் சுகாதாரத்திற்கு கேடான தாதுப்பொருட்கள் செறிவடை வதாக குறிப்பிடப்பட்டது. (பதில்) இதனை ஆய்வுக்குட்படுத்தி பெறப் படும் முடிவுகளின் அடிப்படையில் இதுபற்றி கலந்துரையாடுவது நல்லது எனக் கூறப்பட்டது.

இலங்கை தொழில்நுட்பத்தை உள்வாங்கியதில் பலவருட சாதனை களுண்டு. அண்மையில் விவசாய நவீனமயப்படுத்தல் தொழில் நுட் பத்தை (Agriculture Modernization Project ) பற்றி வினாக்கள் எழுப்பப்பட்டன. இதில் சில தொழில்நுட்பங்களைத் தொடர்ந்து பயன்படுத்த முடியாத நிலையேற்பட்டதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. குறிப்பாக மிளகாய் செய்கைக்காக பூச்சி புகாத வலை பயன்படுத்தல் ஏற்புடையதல்ல எனக் கூறப்பட்டது. இவ்வாறான தொழில் நுட்பங்களினைப் பயிர்ச்செய்கையில் தொடர்ந்தும் பயன்படுத்த கட்டுப்பாடு கள் தேவையென வலியுறுத் தப்பட்டுள்ளது.

கத்திரியில் இந்திய இனமான பெங்கோல் 704 இனத்தின் உற்பத்தி செய்வதற்கான வழிவகைகள் பற்றி தெரிவிக்கப்பட்டது. இவ்வினம் காய்துளைப்பானுக்கு எதிர்ப்புடைய இனமாகியதால் சிறந்ததாகக் கூறப் ட்டாலும் பக்ரீறியா வாடல் நோய்க்கு உட்படுவதனால் இந்நோயைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் பற்றி வினவப்பட்டது.(பதில்) இவ்வினம் அதிக விளைச்சலைக் கொடுப்பதா லும் விவசாயிகள் காய்துளைப் பானுக்கான பூச்சிநாசினி தெளிக்காத தாலும் சிறந்த இனமாக இனங் காணப்பட்டது.

இதில் பக்ரீறியா வாடல்நோய்க்கு எதிர்ப்புடைய இனத்தை உருவாக்குவது பற்றியும் அதனை ஆய்வுக்கெடுத்து புதிய இனத்தை உருவாக்குவது பற்றி கலந்துரையாடப்பட்டது. இது போல உழுந்தில் (MIBG4) வைரசு மொசைக் நோயின் தாக்கம் குறைவாக இருப்பதனால் இதனை விவசாயிகள் அதிகமாகப் பரந்து பட்ட அளவில் பயிரிடுகின்றார்கள்.

ஆனால் இதனது விதையின் உருவம் மிகச்சிறியதாக இருப்பதனால் இதனை நுகர்வோர் அதிகமாக விரும்பி வாங்கு வதில்லை என தெரிவித்தார்கள். வைரசு நோயற்ற அதிக பருமனுடைய உழுந்தை உருவாக்குவது பற்றியும் கலந்து ரையாடப்பட்டது.

நிகழ்வில் இந்திரா குழுமத்தின் நாற்று நடும் இயந்திரத்தின் மூலம் நெல்நாற்று நடுகைசெய்தலும் ட்ரோன்கள் மூலம் பீடைநாசினி விசிறலும் படமாக காண்பிக்கப்பட்டன.

அனைத்து வினாக்களுக்கும் அவற்றிற்கான பதில்களுடன் நிகழ்வு இனிதே நிறைவுற்றதுடன் இதில் அதிகளவில் மாணவர்கள் இணைந்து கொண்டதும் திட்ட மிடலில் ஒழுங்மைப்பில் மாண வர்களின் பங்களிப்பு அதிகரித்தே காணப்பட்டது.

இறுதியில் சமுதாய மேம்பாட்டுக் குழுவின் முதலாவது சஞ்சி கையான "பசுமை ஒளி"யும் நிகழ்விற்குவந்தவர்களுக்கு வழங் கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விவசாயப் பீடத்தில் ஜப்பானிய நிறுவனமாக JICA இனால் விவசாய ஆராய்ச்சிக்காக ஆய்வுகூடம் மற்றும் பண்ணை ஸ்தாபித்ததிலிருந்து PRECIDA-UoJ என்னும் திட்டத்தினூடாக ஜப்பானிய பேராசிரியர்கள் இருவர் பேராசிரியர் கசுவா ஒகட்டோ (Prof Ogata Kazuo) மற்றும் பேராசிரியர் உசாமி கொய்ச்சி (Prof Usami Koichi) அவர்கள் பீடத்தின் கல்விசார், ஆய்வுகள் பற்றி மற்றும் விரிவாக்கம் பற்றி பல தகவல்களையும் பல ஆலோசனை களையும் எம்முடனேயே தங் கியிருந்து வழங்கி வருகின்ற னர். அவ்வப்போது குறிப்பிட்ட சில தொழில்நுட்பப் பயிற்சிக்காக இம் முறை பேராசிரியர் கோகட்டா (Prof Kohata) வருகைதந்து இழைய வளர்ப்பு பற்றி பயிற்சிகளை எமது ஆசிரியர்களுக்கும் மாண வர்களுக்கும் வழங்கி வருகின்றார். ஜப்பானிய் பல்கலைக் கழகங் களிலிருந்தும் வளவாளர்கள் இங்கு வந்து எமக்கு தேவை யான அறிவை, பயிற்சியை இன்னும் நிதியுதவியை வழங்கி பீடத்தின் நிலையைப் பலபடிகள் மேலுயர்த் தியுள்ளனர். இதற்காக நாமென்றும் ஜப்பானிய மக்களுக்குக் கடமைப்பட்டவர் களாவோம். அவர்கள் நினைவில் இந்த பீடம் என்றும் தன்னால் முடிந்ததை இம் மக்களுக்காகச் செய்யும் என உறுதிபூணு கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 717





படகு மண்டபத்தை நெருங்கியது. மண்டபத்தில் இருந்த இரு பெண் மணிகளையும் பார்த்த பிறகு இளவரசனுக்கு வேறு எதிலும் பார்வையும் செல்லவில்லை, கவனமும் செல்லவில்லை. படகு நெருங்கி வந்தபோது இளைய பிராட்டி குந்தவை படிகளில் இறங்கிக் கீழ்ப்படிக்கு வந்தாள். வானதியோ மண்டபத்திலேயே தூண் ஒன்றின் பின்னால் பாதி மறைந்தும் மறையாமலும் நின்று கொண்டிருந்தாள்.

படித்துறை அருகில் வந்து படகு நின்றது: இளவரசன் இறங்குவதற்குப் படகிலிருந்தபடி சேந்தன் அமுதனும், படியில் நின்றபடி இளைய பிராட்டியும் உதவி செய்தார்கள்.

சேந்தன் அமுதனும், பூங்குழலியும் படகைப் பின்னோக்கிச் செலுத்திக் கொண்டு போய்ச் சிறிது தூரத்தில் நிறுத்தினார்கள்.

"தம்பி! எப்படி மெலிந்து விட்டாய்!" என்று குந்தவை கூறியபோது, அவளுடைய கனிந்த குரலிலே கண்ணீர் கலந்து தொனித்தது.

பொன்னியின் செல்வன் "என் உடம்பு மெலிவு இருக்கட்டும், அக்கா! உன் முகம் ஏன் இப்படி வாடியிருக்கிறது? என்னைக் கண்டதும் உன் முகம் தாமரைபோல் மலருவது வழக்கமாயிற்றே? இன்றைக்கு ஏன் உன் முக சந்திரனை மேகம் மறைத்திருக்கிறது? உன் கண்கள் ஏன் கலங்கியிருக்கின்றன? ஆகா! உன் உள்ளத்தைப் புண்படுத்தி வேதனையளித்த எத்தனையோ காரியங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும். இல்லாவிடில் எனக்கு அவ்வளவு அவசரமான ஓலை அனுப்பியிருக்கமாட்டாய்!" என்றான்.

"ஆம், தம்பி! எத்தனையோ அவசரமான விடயங்கள் சொல்ல வேண்டும் கேட்க வேண்டும். இலங்கையின் தங்கச் சிம்மாசனத்தை வேண்டாமென்று தள்ளிய வள்ளலே! இந்தக் கருங்கல் சிம்மாசனத்தில் சிறிது நேரம் உட்கார்ந்து கொள்!" என்றாள்.

பொன்னியின் செல்வன் உட்காரும் போது தமக்கையின் பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொண்டான். குந்தவை அவனுடைய தலையைக் கரத்தினால் தொட்டு, உச்சி முகர்ந்தாள். அவளுடைய கண்ணில் மேலும் கண்ணீர் ததும்பியது.

இருவரும் உட்கார்ந்த பிறகு குந்தவை, "தம்பி! உன்னை இன்றைக்கு நான் இங்கு வருவித்திருக்கவே கூடாது. சூடாமணி விஹாரத்தின் தலைவர் உனக்கு உடம்பு நன்றாகக் குணமாகி விட்டது என்று செய்தி அனுப்பினார். அது சரியல்ல.

சுரம் உன்னை வாட்டி எடுத்திருக்கிறது. ஆனால் உன்னைப் பார்க்காமலிருக்கவும் என்னால் முடியவில்லை. ஆனைமங்கலம் வந்த பிறகு ஒவ்வொரு கணமும் ஒரு யுகமாகச் சென்று கொண்டிருந்தது!" என்றாள்.

"அக்கா! என்னை இங்கு வருவித்தது பற்றி நீ கவலைப்பட வேண்டாம். நீ மட்டும் படகு அனுப்பாமலிருந்தால் நான் இத்தனை நேரம் பழையாறைக்கே புறப்பட்டிருப்பேன்.


கடுமையான சுரத்திலேயுங்கூட உன்னுடைய ஓலைதான் என் மனதை வருத்திக் கொண்டிருந்தது. அந்த ஓலையை ஒருவரிடம் அனுப்பியிருந்தாயே?

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நரியும் போர் முரசும்



(நேற்றையதொடர்ச்சி)

இறுதியில் காட்டின் எல்லைப் பகுதியை அது அடைந்தது. விரைவாக நான் உணவைத் தேடிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நான் இறந்து விடுவேன், என்று எண்ணியது.

அங்குமிங்கும் அலைந்த போது போர் முடிந்து ஆளரவமற்ற ஒரு போர்க்களத்தை நரி பார்த்தது. திடீரென்று காதைப் பிளக்கும் படியாக 'டம், டம்' என்று ஓசை கேட்டது. கோமயாவுக்குப் பயம் பிடித்துக் கொண்டது.

மிக விரைவாகக் காட்டுக்குள் ஓடியது. சிறிது தூரம் சென்ற பிறகு நின்று சுற்றும் முற்றும் பார்த்தது. இப்போதும் அந்த ஓசை கேட்டது.

ஆனால், அது தொலைவில் இருந்து வந்தது. "நான் தைரியமாக முன்னே சென்று எங்கிருந்து அந்தப் பயங்கரச் சத்தம் வருகிறது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்," என்று தீர்மானித்தது.

கோமயா மெதுவாகப் போர்க்களத்திற்குச் சென்றது. அதன் நெஞ்சு முழுவதும் அச்சம் இருந்தாலும் முன்னேறிச் சென்றது. அங்கு சென்றவுடன் கோமயாவிற்கு நிம்மதி ஏற்பட்டது.

ஆளரவமற்ற அந்த இடத்தில் மரத்தினடியில் ஒரு போர் முரசு இருந்தது. காற்று அடிக்கும் போது, மரத்தின் கீழ்க்கிளை அந்த முரசில் மோதும் போது பெரிய ஓசை எழும்பியது என்பதைக் கோமயா புரிந்து கொண்டது.

போர் முரசுக்கு அருகில் நிறைய உணவுப் பொருட்கள் சிதறிக் கிடந்ததைக் கண்டு அந்த நரி மிகவும் மகிழ்ச்சியடைந்தது. வயிறு நிறைய உணவை உண்டது.

"அந்தச் சத்தத்திற்குப் பயந்து நான் இங்கிருந்து ஓடியிருந்தால் இந்தச் சுவை மிக்க உணவு எனக்குக் கிடைத்திருக்காது, நான் பெரிய முட்டாளாக இருந்திருப்பேன்" என்று தனக்குள் எண்ணிக் கொண்டது நரி.

நீதி : அச்சத்தை நீக்கு. துணிவைத் துணையாக்கு.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருக்கு நாம் செய்யும் உதவிகள் நமது வாழ்வின் மதிப்பை உயர்த்தும்.

~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உக்ரைன் ஜனாதிபதியை அதட்டிய அதிபர் ட்ரம்ப்

மற்றவர்களை நம்பி நாம் எடுக்கின்ற தீர்மானங்கள் எப்படியாக இருக்கும் என்பதற்கு உக்ரைன் நாடு நல்ல உதாரணம்.

ஆம், கடந்த சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்க அதிபர் ரொனால்ட் ட்ரம்ப் அவர்களை உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி சந்தித்தார்.

வெள்ளை மாளிகையில் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது அமெரிக்க அதிபர் ரொனால்ட் ட்ரம்ப் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

ஒரு கட்டத்தில் ஜெலன்ஸ்கியின் தோளைத் தனது கையால் தட்டுகின்ற அளவில் ட்ரம்ப் கடும் கோபமுற்றார்.

அதையும் கடந்து, வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறுமாறு ஜெலன்ஸ்கியிடம் ட்ரம்ப் கூற, அவரும் வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறினார்.

அமெரிக்க அதிபருடன் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி நேருக்கு நேர் வாக்குவாதத்தில் ஈடுபட்டாராயினும் அந்த வாக்குவாதம் உக்ரைன் நாட்டுக்கு எந்த வகையிலும் உதவப் போவதில்லை என்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

உண்மையில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அடைந்த கோபத்தில் நியாயம் உண்டு என்பது நம் நிலைப்பாடு.

அதாவது யுத்த நிறுத்தத்துக்கு உக்ரைன் உடன்பட வேண்டும் என்பதை ட்ரம்ப் வலியுறுத்தினார்.

கூடவே நீங்கள் இலட்சக்கணக்கான மனித உயிர்களுடன் விளையாடுகிறீர்கள் என்பதைச் சுட்டிக்காட்டிய ட்ரம்ப்; யுத்த நிறுத்தம் .. யுத்த நிறுத்தம் .. என்று கூறி, அமெரிக்காவை நீங்கள் ஏமாற்றுகிறீர்கள்.

எனவே முதலில் யுத்த நிறுத்தத்துக்கு வாருங்கள். நீங்கள் யுத்த நிறுத்தத்துக்கு வரத் தவறினால், மூன்றாம் உலகப் போருக்கு அது வழிவகுக்கலாம் என்ற கருத்தை ஜெலன்ஸ்கியிடம் ட்ரம்ப் ஆணித்தரமாக முன்வைத்தார்.

உண்மையில் ட்ரம்ப் முன்வைத்த மேற்போந்த வாதம் வரவேற்கப்பட வேண்டும்.

ஏனெனில் அமெரிக்காவின் கடந்த கால செயற்பாடுகள் யுத்தத்தைத் தூண்டுவதாக - ஆதரிப்பதாக இருந்துள்ளது.

அன்று அமெரிக்கா, உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்காதிருக்குமாயின் சில வேளை உக்ரைன் ரஷ்யாவுடன் இணக்கப்பாட்டுக்குச் சென்றிருக்கலாம்.

ஆக, அமெரிக்காவின் முன்னைய அதிபர்கள் ரஷ்யாவை உக்ரைன் மூலம் பழிதீர்க்க நினைத்தனர். தவிர, காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதலுக்கும் அமெரிக்க அதிபர்களே மறைமுகக் காரணமாக இருந்தனர்.

ஆனால் அமெரிக்காவின் புதிய அதிபர் ட்ரம்ப் உலகில் அமைதியை நிலைநாட்டுவேன் என்ற உறுதிமொழியோடு ஆட்சிக்கு வந்தவர்.

எனவே ரஷ்யா மீது தனது நாடு கொண்ட பகையைப் பொருட்படுத்தாமல், ரஷ்யாவும் உக்ரைனும் யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும் என்ற தனது முடிவை அவர் உக்ரைன் ஜனாதிபதியிடம் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

உண்மையில் அமெரிக்க அதிபர் ட்ரம்பின் நோக்கம் உலக அமைதியாயின், அதனை வரவேற்கின்ற தார்மீகக் கடமை உலக நாடுகளுக்கு உண்டு.

# நாங்கள் சில்லறைக்கட்சி அல்ல எம்மை மலினப்படுத்தக்கூடாது

## சீ.வி.கே சிவஞானம் தெரிவிப்பு

*(யாழ்ப்பாணம்)*

நாங்கள் ஒன்றும் சில்லறைக் கட்சி அல்ல. எம்மை யாரும் மலினப்படுத்தக்கூடாது என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியோடு ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய மூன்று கட்சிகளுமாக நான்கு கட்சிகள் இணைந்து கூட்டமைப்பாகச் செயற்பட்டு வந்திருந்தோம்.

ஆனால் கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட காலத்தில் ஒரே கொள்கையில் தனித் தனியாக போட்டியிட்டு கூட்டாக செயற்படுவதென இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தீர்மானித்தது. ஆனால் அதனைத் தவறாக சித்தரித்து தமிழரசு தனிவழி என்றவாறாக பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு கூட்டமைப்பில் இருந்து கட்சிகள் வெளியேறியிருந்தன.

நாங்கள் கூட்டமைப்பை உடைக்க வேண்டுமென நினைக்கவில்லை. இப்போது கூட முன்னரைப் போல மீளவும் கூட்டமைப்பாக ஒன்று சேர்ந்து இயங்குவதற்கான அழைப்பையே விடுத்திருக்கிறோம்.

அந்த முயற்சியின் தொடராக கூட்டமைப்பில் இருந்த கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடி இருக்கிறேன்.

ஆனால் இக் கட்சிகளின் தலைவர்களை நான் சந்தித்த போது சாதகமாகப் பரிசீலிப்பதாகச் சொன்னவர்கள் மறுநாளே தாங்கள் ஒரு புதிய கூட்டணியை உருவாக்கியிருக்கின்றனர்.

இப்படி ஒரு திட்டம் அவர்களிடம் இருக்கிறது என்றால் அதனை நேரடியாகவே எங்களிடத்தில் சொல்லியிருக்கலாம். அதைவிடுத்து ஏமாற்று வித்தை காட்டியமையே எமக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

நாங்கள் அவர்களின் புதிய கூட்டணியை எதிர்க்கவில்லை. அது அவர்களது உரிமை. ஆனால் அவர்களின் செயற்பாடே எமக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதைதான் நான் சொல்லியிருக்கிறேன்.

ஆனால் தாம் ஒரு கூட்டணியை அமைத்துள்ளதாகவும் எங்களது கட்சியின் மத்திய குழுவோடு பேசிவிட்டு வருமாறும் புளொட் தலைவர் சித்தார்த்தன் எனக்குக் கடிதம் அனுப்பியுள்ளார். இவ்வாறு அவர்கள் கூறுவதில் என்ன அர்த்தம் உள்ளது. நாங்கள் ஒன்றும் சில்லறைக்கட்சி அல்ல. எம்மை யாரும் மலினப்படுத்தக் கூடாது.

ஈழத் தமிழினத்திற்காக நாங்கள் மீளவும் கூட்டமைப்பாக இயங்குவோம் வாருங்கள் என்ற இணக்கத்தின் அடிப்படையிலேயே அழைப்புவிடுத்தோம். அதைவிடுத்து உங்களது கூட்டணியுடன் நாங்கள் வரப்போவதாகச் சொல்லவில்லை.

இந்த விவகாரத்தில் மிகவும் அப்பாவித்தனமாக நாங்கள் இருந்துவிட்டோமோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால் நாங்கள் இப்போதும் கூறுகிறோம், கூட்டமைப்பிலிருந்து செயற்பட்டவர்கள் மீளவும் கூட்டமைப்பிற்கு வருவதற்கான கதவுகள் திறந்தேயுள்ளன.

அவர்கள் வராவிட்டால் தமிழ் அரசுக் கட்சி மீண்டும் தனி வழியில் போவது இயல்பானது. ஆனாலும் தமிழ்த் தலைமைகளைக் கொண்ட கட்சிகளுக்கே தமிழ் மக்கள் தமது ஆதரவை வழங்க வேண்டும்.

தந்தை செல்வா வழியில் வந்தவன் நான். தேசிய தலைவரின் கொள்கையில் நிற்கிறேன். எனக்குப் பயம்கிடையாது. ஆனால் தமிழர் நலன் சார்ந்து செயற்பட வேண்டியது அவசியம். அந்த அடிப்படையில் தான் சில முயற்சிகளை எடுத்துச் செயற்படுகிறோம் என்றார். *(ம-7,33)*

## செவ்வந்தி தொடர்பில் தகவல் வழங்குபவர்களுக்கான

### பரிசுத்தொகை அதிகரிப்பு

*(கொழும்பு)*

கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு உதவிய முக்கிய சந்தேக நபரான இஷாரா செவ்வந்தி தொடர்பில் தகவல் வழங்குபவர்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட பரிசுத் தொகையை அதிகரித்துள்ளதாக பொலிஸ்திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி ரூ.10 இலட்சமாக இருந்த பரிசுத் தொகை தற்பொழுது ரூ.12 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் தகவல் வழங்குபவர்களின் இரகசியத் தன்மையைப் பாதுகாப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இஷாரா செவ்வந்தி தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்திருந்தால் அதனை அறியப்படுத்துவதற்குப் பின்வரும் தொலைபேசி எண்களைத் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர், கொழும்பு குற்றவியல் பிரிவு - 071 859 1727, கொழும்பு குற்றவியல் பிரிவின் கட்டளைத் தளபதி - 071 859 1735. *(ம-7)*

## வடமராட்சி கிழக்கில் மோ.சைக்கிள் விபத்து

### இருவர் காயம்

*(யாழ்ப்பாணம்)*

வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்றுப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளானது அதிக வேகம் காரணமாக, அதன் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த இருவரும் மருதங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். *(ம-7)*

## யாழ்.பல்கலைக்கழகத்தில் மாற்று ஆற்றலர் தினம்

*(யாழ்ப்பாணம்)*

மாற்று ஆற்றலர் தினம் இன்று 5ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

சட்டத்துறைத் தலைவர் திருமதி கோசலை மதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராசா தொடக்கவுரை ஆற்றுவார்.

மாற்றுத் திறனை உள்ளீர்த்தலில் பல்கலைக்கழகங்களின் வகிபாகம்; சந்தர்ப்பங்களும் சவால்களும் எனும் பொருளில்; பேராசிரியர் சி.ரகுராம், பேராசிரியர் கீ.சத்தியதாஸ், செல்வி ந.உதயனி, வி.க.விஜயலாதன், சி.பிரதீபன், ச.அமல அசாம் ஆகியோர் உரையாற்றுவர்.

இந்நிகழ்வில் அறிமுக உரையை திருமதி கனிஸ்ரா ஆர்த்தி ஹென்ஸ்மன் நிகழ்த்த, நிகழ்வுகளை கலாநிதி ம.திருவரங்கன் நெறிப்படுத்துவார்., நிகழ்வில் நன்றியுரையை நி.பாஸ்கரன் நிகழ்த்துவார். *(ம-7)*

## கொக்குவில் பகுதியில் வீட்டின் மீது தாக்குதல்

*(கொக்குவில்)*

கொக்குவில் மேற்கு கேணியடிப் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது முகமூடி அணிந்த நபர்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.


கடந்த ஞாயிற்றுக் கிழமை(02) மாலை வேளை இடம்பெற்ற இத்தாக்குதலின் போது வீட்டின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டதுடன் வீட்டின் முன்நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலை நடத்தியவர்கள் வாள்களுடன் நின்றதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. *(ம-7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசிபலன்கள்-2025

## கடன் சுமை குறையும்



**கிரகநிலை** - தைரிய வீரிய ஸ்தானத்தில் சூரியன், சந்திரன், சனி - சுக ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன், புதன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் குரு -களத்திர ஸ்தானத்தில் செவ்வாய் - தொழில் ஸ்தானத்தில் கேது என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 04-03-2025 அன்று சுக்கிர பகவான் வக்கிரம் ஆகிறார். 09-03-2025 அன்று புதன் பகவான் வக்கிரம் ஆகிறார். 14-03-2025 அன்று சூரிய பகவான் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 18-03-2025 அன்று வக்கிர நிலையில் இருக்கும் புதன் பகவான் சுக ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30-03-2025 அன்று புதன் வக்கிர நிவர்த்தி ஆகிறார்.

**பலன்கள்:** சோம்பல் இல்லாமல் சுறுசுறுப்புடன் இருக்கும் தனுசு இராசியினரே! இந்த மாதம் எதிர்பார்த்த காரியங்கள் மனதுக்கு திருப்தி அளிக்கும் விதத்தில் நடந்து முடியும். கடன் சுமை குறையும். எதிர்ப்புகள் அகலும். எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து செய்யத் தோன்றும். யாருக்காவது உத்தரவாதம் தரும்போது கவனமாக இருப்பது நல்லது. சொன்ன சொல்லைக் காப்பாற்ற பாடுபடவேண்டி இருக்கும்.

தொழில், வியாபாரத்தில் கடினமான முயற்சிக்குப் பிறகு எதிர்பார்த்த இலாபம் வந்து சேரும். போட்டிகள் குறையும். புதிய வாடிக்கையாளர்களால் திருப்தி ஏற்படும். கடன் தொல்லைகள் குறையும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நல்ல பதவிகள் தாமதமாக கிடைக்கும். புதிய வேலைக்கு முயற்சி செய்தவர்களுக்கு நல்ல பலன் ஏற்படும்.

வாழ்க்கைத் துணையின் ஆலோசனை உங்கள் முன்னேற்றத்திற்கு உதவும். எதிர்பாராமல் ஏற்படும் குடும்பச் செலவை சமாளிக்க தேவையான பண உதவியும் கிடைக்கும். சுக்கிரன் சஞ்சாரத்தால் வீட்டிற்கு தேவையான வசதிகள் கிடைக்கும். நண்பர்கள், உறவினர்கள் மூலம் தேவையான உதவிகளும் கிடைக்கப் பெறுவீர்கள். பெண்கள் அடுத்தவர்களுக்கு உதவி செய்யும் போது கவனம் தேவை. எதையும் ஒரு முறைக்கு இருமுறை யோசித்து செய்வது நல்லது.

கலைத்துறையினர் உற்சாகமாக செயற்பட்டு வேலைகளை உடனுக்குடன் செய்து முடிப்பார்கள். புதிய பதவி அல்லது பொறுப்புகளைச் சாதகமாகப் பயன்படுத்தி முன்னேறுவீர்கள். குடும்பத்துடன் விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் சூழ்நிலை வரும்.

அரசியல்துறையினர் மனத்திருப்தியுடன் காரியங்களைச்செய்து சாதகமான பலன் பெறுவீர்கள். பயணம் செல்ல நேரலாம். மனதுக்கு பிடித்தவர்களை




சந்திக்க நேரிடலாம். பெரியவர்களின் சந்திப்பு மனதுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கும். உடனிருப்பவர்களுடன் எச்சரிக்கையாகப் பழகுவது நல்லது. இரகசியங்களை கையாளுவதில் கவனம் தேவை. மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற ஆசிரியர்களின் ஆலோசனையைக் கேட்டு பயன் பெறுவது நல்லது. முயற்சிகள் வெற்றி பெறும்.

**மூலம்:** உடல் நிலையானது சற்று சோர்வுடன் இருந்தாலும் அன்றாடப் பணிகளில் சுறுசுறுப்புடனேயே செயற்படுவீர்கள். குடும்பத்தில் சுபீட்சமான நிலை இருக்கும். பணவரவுகளும் தேவைக்கேற்றபடியே இருக்கும். உற்றார் உறவினர்களை சற்று அனுசரித்து செல்வது நல்லது.

**பூராடம்:** எடுக்கும் முயற்சிகளில் தடைகளுக்குப் பின் வெற்றி கிட்டும். பணிபுரியும் பெண்கள் பிறர் விடயங்களில் தலையீடு செய்யாதிருப்பது நல்லது. பணவரவுகள் தேவைக்கேற்றபடி இருந்தாலும் பணம் கொடுக்கல் வாங்கலில் பெரிய தொகைகளை ஈடுபடுத்தாதிருப்பது நல்லது. கொடுத்த கடன்களைத் திரும்பப் பெறுவதில் சில சிக்கல்களை சந்திப்பீர்கள்.

**உத்திராடம் 1ஆம் பாதம்:** ஏஜென்ஸி, கொண்றாக்ட் போன்ற துறைகளில் இருப்போர் சிறு சிறு விரயங்களையும் தேவையற்ற அலைச்சல்களையும் எதிர்கொள்ள நேரிடும்.

மக்களின் ஆதரவு எப்பொழுதும் உண்டு என்றாலும் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றுவது நல்லது. உடனிருப்பவர்களால் சில மனச் சஞ்சலங்கள் தோன்றி மறையும்.

**பரிகாரம்:** திருவாசகம் படித்து வர எல்லாப் பிரச்சினைகளும் தீரும். மனதில் அமைதி உண்டாகும்.

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், வியாழன், வெள்ளி .

**சந்திராஷ்டம தினங்கள்:** 10, 11

**அதிஷ்ட தினங்கள்:** 4, 5

## குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்



**கிரகநிலை** - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சூரியன், சந்திரன், சனி -தைரிய வீரிய ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன், புதன் - பஞ்சம ஸ்தானத்தில் குரு - ரண ருண ரோக ஸ்தானத்தில் செவ்வாய் - பாக்கிய ஸ்தானத்தில் கேது என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 04-03-2025 அன்று சுக்கிர பகவான் வக்கிரம் ஆகிறார். 09-03-2025 அன்று புதன் பகவான் வக்கிரம் ஆகிறார். 14-03-2025 அன்று சூரிய பகவான் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 18-03-2025 அன்று வக்கிர நிலையில் இருக்கும் புதன் பகவான் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30-03-2025 அன்று புதன் வக்கிர நிவர்த்தி ஆகிறார்.

**பலன்கள்:** பொதுக்காரியங்களில் விருப்பம் உள்ள மகர ராசியினரே! நீங்கள் திறமைசாலிகளாகவும் இருப்பீர்கள். இந்த மாதம் அறிவுத் திறன் கூடும். இனிமையான பேச்சின் மூலம் பலரது உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். சுக்கிரன் சஞ்சாரத்தால் செல்வம் சேரும். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான போக்கு காணப்படும். எதிர்ப்புகள் அகலும். உங்கள் செயல்களுக்கு இருந்த தடை நீங்கும்.

தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். பலவகை முன்னேற்றங்களும் உண்டாகும். பழைய பாக்கிகள் வசூலாகும். தேவையான பண உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் சாதிக்கும் திறமையும் சாமர்த்தியமும் உண்டாகும்.

உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தேவையற்ற இடமாற்றம் உண்டாகலாம். மற்றவர்களுக்காக பரிந்து பேசும் போதும் அவர்களுக்கு உதவிகள் செய்யும் போதும் கவனமாக இருப்பது நல்லது. வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் ஏற்படும். பெண்களுக்கு அறிவுத் திறமை அதிகரிக்கும். இனிமையான பேச்சின் மூலம் எதிலும் வெற்றி கிடைக்கும். தேவையான பண உதவியையும் எதிர்பார்க்கலாம்.

கலைத்துறையினர் அதீத கவனத்துடன் செயற்படுவது உங்களுக்கு பதவி உயர்வு மற்றும் வெற்றியைத் தேடித் தரும். எதிர்பார்த்த வாய்ப்புகள் வந்து சேரும். சிலருக்கு நெடுநாளைய ஆசைகள் நிறைவேறும். இலட்சியங்கள் கைகூடும். மனதிற்கு நெகிழ்ச்சியான சம்பவங்கள் நடக்கும். நிதானம் தேவை.

அரசியல்துறையினருக்கு கவனம் தேவை. இலாபம் உண்டாகும். கடின உழைப்பு உங்களுக்கு வெற்றியைத் தேடித்தரும். சிறுசிக்கல்கள் ஏற்பட்டு




மறையும். கவனத்துடன் செயற்பட்டால் சிக்கல்களைத் தவிர்க்கலாம். சின்னச் சின்ன செலவுகளைச் சந்திக்க நேரிடலாம். உழைப்பிற்கான ஊதியம் சற்று குறைவாகக் கிடைக்கலாம். மன தைரியத்தால் வெற்றி காண்பீர்கள். மாணவர்கள் திறமையாக செயற்பட்டு பாராட்டுகள் கிடைக்க பெறுவீர்கள். கல்வியில் முன்னேற்றம் காணப்படும்.

**உத்திராடம் 2, 3, 4ஆம் பாதங்கள்:** நண்பர்களின் உதவி சிறப்பாக இருக்கும் என்றாலும் நல்ல நட்புகளைத் தேர்ந்தெடுத்துப் பழகுவது நல்லது. எடுக்கும் முயற்சிகளை எதிர் நீச்சல் போட்டே முடிக்க வேண்டிவரும். எதிலும் சற்றுக் கவனமுடன் செயற்பட்டால் நற்பலனைப் பெற முடியும். மாணவர்கள் கல்வியில் சற்று கவனத்துடன் செயற்பட்டால் எதிர்பார்த்த இலக்கை அடைவீர்கள்.

**திருவோணம்:** கணவன் மனைவியிடையே சிறுசிறு கருத்து வேறுபாடுகளும் உடல் ஆரோக்கியத்தில் பாதிப்புகளும் ஏற்படும். திருமண சுப காரியங்கள் தடைகளுக்கு பின் நிறைவேறும். புத்திர வழியில் நிம்மதி குறைவு, பூர்வீகச் சொத்துக்களால் வீண் செலவுகள் உண்டாகும். கணவன் மனைவியிடையே சிறு சிறு கருத்து வேறுபாடுகள் தோன்றும் என்றாலும் ஒற்றுமை குறையாது.

**அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்:** உற்றார், உறவினர்களை அனுசரித்து செல்வது நல்லது. செய்யும் தொழில் வியாபாரத்தில் நல்ல இலாபங்கள் அமையும். என்றாலும் கூட்டாளிகளால் சற்று நிம்மதிக்குறைவு ஏற்படும். பயணங்களால் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் அடிக்கடி பாதிப்புகள் தோன்றினாலும் அன்றாடப் பணிகளில் சுறுசுறுப்புடன் செயற்பட முடியும்.

**பரிகாரம்:** சனிக்கிழமைகளில் விநாயகப் பெருமானை தீபம் ஏற்றி வழிபட்டு வர காரிய தடைகள் நீங்கும். எதிலும் நன்மை உண்டாகும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:** திங்கள், வெள்ளி ;

**சந்திராஷ்டம தினங்கள்:** 12, 13, 14

**அதிஷ்ட தினங்கள்:** 5, 6, 7

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சித்...

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

336 பிரதேச சபைகளுக்கான தேர்தலுக்கு அஞ்சல் வாக்களிக்கத் தகைமை பெற்றுள்ளவர்களின் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் காலப்பகுதி 2025.03.03ஆம் திகதியிலிருந்து 2025.03.12ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணியாகும்.

எவ்விதத்திலும் இத்திகதி நீடிக்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## இளைஞன்...

சியசாலைப் பொறுப்பாளராக வேலை செய்து வருகின்றார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிளில் வாள்களுடன் வந்த இருவர் களஞ்சியசாலைக்குள் அத்துமீறி நுழைந்து வேலையில் இருந்த இளைஞன் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

வாள்வெட்டில் இளைஞனின் கை விரல் துண்டாடப்பட்டுள்ள நிலையில் இளைஞன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் கடையில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராவில் பதிவான வீடியோக் காட்சிகளின் அடிப்படையில் வாள்வெட்டுத் தாக்குதலை நடத்திய இருவரையும் பொலிஸார் இனங்கண்டுள்ள நிலையில் அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7)

## மோ.சைக்கி...

குறித்த பெண் கடந்த மாதம் 17ஆம் திகதி கோப்பாய் அஞ்சல் அலுவலகத்தில் உதவித்தொகையைப் பெற்றுக் கொண்டு, வீதியால் நடந்து சென்றுகொண்டிருந்தபோது அப்பகுதியால் வந்த பெண் ஒருவர் அவரை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றுள்ளார்.

இந்நிலையில் இருபாலை முனிகோவில் வீதியில் குறித்த பெண் மோட்டார் சைக்கிளிலிருந்து தவறிவிழுந்து படுகாயமடைந்துள்ளார்.

உடனடியாகக் கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## தையிட்டியில்...

களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் தையிட்டி விகாரை காணி தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, அந்தப் பகுதியில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் அந்த மக்களின் காணியை விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமெனக் குறிப்பிட்டார். அந்தப் பணிகள் முறையாக இடம்பெறும்.

அதேபோன்று அங்கு ஏதாவது ஒரு காணியை விடுவிப்பதன் ஊடாகவோ அல்லது ஏதாவது ஒரு காணியில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதன் ஊடாகவோ நாட்டில் மீண்டும் இனவாதமும் மதவாதமும் தலைதூக்குவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

இனங்களுக்கு இடையே சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கே அரசாங்கத்துக்குப் பெரும்பான்மையான மக்கள் ஆணை கிடைத்துள்ளது.

இதனடிப்படையிலேயே இந்த முறை பாதீட்டில் அதிக தொகை வடக்குக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் விசேட கவனமும் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே மீண்டும் மதவாதத்தையும் இனவாதத்தையும் உருவாக்க இடமளிக்காமல் அனைவரும் இலங்கையர்கள் என்ற வகையில் செயற்படுவதே எமது இலக்காகும்.

இதனடிப்படையிலேயே இலங்கையர் தினமொன்றை எதிர்வரும் ஒக்ரோபர் அல்லது நவம்பரில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (ம-7)

## அதிகாரங்களை...

பொறுப்பையேற்று நான்கு மாதங்களே ஆகின்றன என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். இலங்கை இந்த மாற்றத்தைப் பயன்படுத்தி, தான் எதிர்கொண்டுள்ள சவால்களிற்கு தீர்வைக் காணமுயலவேண்டும் என நாங்கள் ஊக்குவிக்கின்றோம்.

நல்லிணக்க விடயங்கள் அர்த்தபூர்வமான முன்னேற்றத்தை ஏற்படுத்துவது குறித்த அரசாங்கத்தின் அர்ப்பணிப்பையும் நிலங்களை மீள கையளிப்பது, வீதித் தடைகளை அகற்றுவது, வடக்குக் கிழக்கில் உள்ள மக்கள் தங்கள் அன்புக்குரியவர்களை கடந்த காலங்களை நினைவு கூர அனுமதிப்பது ஆகிய ஆரம்பகட்ட நடவடிக்கைகளையும் நாங்கள் வரவேற்கின்றோம்.

நம்பிக்கையைக் கட்டியெழுப்பி அது தொடர்ந்தும் நீடிக்கச் செய்வதற்கு சிவில் சமூகத்தினருக்கான தளத்தினைப் பாதுகாப்பது அவசியம், சிவில் சமூகசெயற்பாட்டாளர்களைக் கண்காணிப்பது, துன்புறுத்துவது போன்ற நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்.

இலங்கையின் அரசமைப்பின் அடிப்படையில் அதிகாரங்களைப் பகிர்வதற்கான ஆட்சி முறை சீர்திருத்தங்களில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான அர்ப்பணிப்பை நாங்கள் வரவேற்கின்றோம்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மாற்றீடு செய்வது குறித்த தனது நோக்கத்தை அரசாங்கம் வெளியிட்டுள்ளதை நாங்கள் கருத்தில் கொண்டுள்ளோம்.

புதிய சட்டம் சர்வதேச தராதரங்களிற்கு ஏற்ற விதத்தில் காணப்படவேண்டும் என நாங்கள் மீள வலியுறுத்துகின்றோம்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யவேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

ஊழல்ஒழிப்பு மற்றும் மனித உரிமை விவகாரங்களில் முன்னேற்றத்தை காண்பதற்கு அரசாங்கம் முயலும் தருணத்தில் எந்தவொரு முழுமையான நல்லிணக்க மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்ட மக்களின் ஆதரவைப் பெற்றதாக கடந்தகால பரிந்துரைகளின் மேல் கட்டியெழுப்பப்பட்டதாக சர்வதேச தராதரத்தினைப் பூர்த்தி செய்வதாகக் காணப்பட வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

காணாமல்போனோர் மற்றும் இழப்பீடுகள் தொடர்பான உள்நாட்டு அமைப்புகளின் பணிகளை மீண்டும் ஊக்கப்படுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம் என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

மஹஜன சம்பத — திகதி 2025.03.04 — சீட்டிழுப்பு இலக்கம் 5765 — P 7 2 6 4 7 1 — அத சம்பத: P 6 4 7 1 — சீட்டிழுப்பு இலக்கம் 0340

தன நிதானய — திகதி 2025.03.04 — சீட்டிழுப்பு இலக்கம் 1795 — P 18 55 64 78 P — Double Chance 49323

மெகா பவர் — திகதி 04/03/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2113 — L 18 17 29 51 64

ஜய — திகதி 2025.03.04 — சீட்டிழுப்பு இலக்கம் 033 — X 6 1 3 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4007 — சீட்டிழுப்பு திகதி 04.03.2025 — C 07 23 49 73 — C

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.03.04 — சீட்டிழுப்பு இலக்கம் 1074 — கடகம் 39 42 46 52 கடகம் — 47892 — 18

சுப்பர் பல சம்பத — 04.03.2025 — வெற்றி வாரம் 473 — 0 — 8 7 7 3 6 5 — 84995 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.32,828,959.20

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2739 — சீட்டிழுப்பு திகதி 2025.03.04 — தினம் செவ்வாய்க்கிழமை — 07 15 24 60 E — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.90,022,894.40

சனிதா — திகதி 04.03.2025 — வெற்றி வாரம் 4900 — 07 11 28 46 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,617,203.20 — 90931

சசிரி — வெற்றி வாரம் 635 — சீட்டிழுப்பு திகதி 04.03.2025 — செவ்வாய்க்கிழமை — 09 19 28 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00

ஷாஸ் — சீட்டிழுப்பு வாரம் 4451 — சீட்டிழுப்பு திகதி 04.03.2025 — தினம் செவ்வாய்க்கிழமை — 22 27 57 60 — மீனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.16,331,256.80 — 264866

கப்ருக — 1915 — 04.03.2025 — H 24 10 17 63 73 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.567,341,917.40

அத கோடிபதி — செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் 2565 — சீட்டிழுப்பு திகதி 2025.03.04 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.76,801,910.40 — 05 19 27 60 V — 516554

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கனடாவில் PR வாய்ப்புக்கள்**

கனடாவில் MARCH 31 இல் ஆரம்பமாகும் குடும்பத்துடன் நிரந்தரமாக குடியேறுவதற்குரிய கற்கைநெறி

CARE GIVER கற்கைநெறி

HOME SUPPORT WORKER & HOME CHILD CARE PROVIDER

கனடாவில் 50 ,000 க்கு மேற்பட்ட வேலை வாய்ப்புக்கள்

G.C.E O/L

6 மாதங்கள்

வார இறுதி நாட்கள் (சனி ,ஞாயிறு)

16 முதல் 50 வரை

50,000/-

NVQ/UK DIPLOMA சான்றிதழ்கள் வழங்கப்படும் (C-2361)

CIMS 49A, CHAPPEL LANE JAFFNA 0777068777



**வீடு வாடகைக்கு**

- நல்லூர் அரசடி வீதியில் மேல் மாடிவீடு வாடகைக்கு உண்டு. மாணவர்கள், சிறிய குடும்பம் வசிக்கக் கூடியது.
- உயர்ரக ரேமன், கிறைடன் நாய்கள் விற்பனைக்குண்டு.

076 70 62 266 (3566)


# 2024 உயர்தரப் பரீட்சையின் செயன்முறைப் பரீட்சை தொடர்பான அறிவிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் (2024) செயன்முறைப் பரீட்சை குறித்து பரீட்சைத் திணைக்களம் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி உயிரியல் தொழில் நுட்பவியல் பாடத்துடன் தொடர்புடைய செயன்முறைப் பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் 08 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் உள்ள 75 செயன்முறைப் பரீட்சை மத்திய நிலையங்களில் குறித்த செயன்முறைப் பரீட்சை இடம்பெறவுள்ளது.

அதன்படி எதிர்வரும் 07ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் எதிர்வரும் 10ஆம் திகதி வரை செயன்முறைப் பரீட்சை முழுமையாக முடிவடையும் வரை உதவி வகுப்புக்களை நடத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. (ம-7)

# எரிபொருள் விநியோக சங்கப் பிரதித் தலைவரிடம் சி.ஐ.டி 5 மணிநேரம் விசாரணை

எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கத்தின் பிரதித் தலைவர் குசும் சந்தனாயக்க மற்றும் பணிப்பாளர் குழு உறுப்பினர் சாந்த சில்வா ஆகியோரிடம் குற்றப் புலனாய்வு 5 மணி நேரம் விசாரணை மேற்கொண்டுள்ளது.

நேற்றையதினம் வாக்குமூலங்களை வழங்கிய 5 மணி நேரத்திற்குப் பிறகு இருவரும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திலிருந்து வெளியேறியுள்ளனர்.

அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் நோக்கில் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை சீர்குலைக்க இந்தப் பிரதிநிதிகள் முயற்சிப்பதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

அதன்படி இருவரும் நேற்று குற்றப் புலனாய்வுத் துறையில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


**Schengen Visa**

Visit Visa

போலிகள் மூலம் உங்கள் பொன்னான காலம் மற்றும் பணத்தினை விரயமாக்காதீர்கள்

- 99% கடந்த கால Success Rate
- 100 % Money Back gurantee
- நேர்மையான முறையில் சட்டத்தரணி மூலம் ஒப்பந்தம்

Schengen Visa என்பது 29 ஐரோப்பிய நாடுகளை உள்ளடக்கிய Schengen பகுதிக்குச் செல்ல அனுமதிக்கும் அனுமதி

Austria, Belgium, Czech Rupublic, Denmark, Estonia, Finland, Sweden

France, Germany, Greece, Hungary, Iceland, Italy, Switzerland

Latvia, Lithuania, Liechtenstein, Luxembourg, Malta, Netherlands

Norway, Poland, Portugal, Slovakia, Slovenia, Spain

- 3 மாத காலத்திற்குள் செல்ல முடியும்.
- விரும்புவோர் முன்பதிவு செய்து நேரில் வரவும்.
- 13 வருட காலமாக தமிழ் மக்களின் நம்பிக்கை பெற்ற ஒரே ஒரு நிறுவனம்.

Winstar Consultants (Pvt) Ltd
45, Vembadi Street, Jaffna.
T.P : 077 077 6979 (894)



2024 (2025) O/L மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு

வரலாறு — ஆசிரியர் RS. சந்திரன்

காலம்: மார்ச் 08,09 சனி, ஞாயிற்றுக்கிழமை (காலை 8.00 மணி முதல் 1.00 வரை)

குறிப்புகள் :
- ஆர்வமுள்ள வெளிமாணவர்கள் கலந்து கொள்ள முடியும்.
- எதிர்பார்க்கை வினாக்களும் பாடக்குறிப்புக்களும் வழங்கப்படும்
- இலங்கைப்படம், உலகப்படம் இலகுவான முறையின் அடிப்படையில் குறித்துக் காட்டப்படும்
- கட்டணத்தைச் செலுத்தி கருத்தரங்கில் பங்குபற்ற முடியும். (3575)

றோயல் அக்கடமி
அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0776649134 நிர்வாகம்



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2377) 076 825 7716 (ஆகாஸ்)



**G.C.E O/L 2024 மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு**

விஞ்ஞானம் — ஆசிரியர் S.கோபிநாத் SLTS, Spl.Trd (Science)

March 07 வெள்ளி மாலை 5.30 - 8.30 pm (Biology)
March 08 சனி மாலை 5.30 - 8.30 pm (Chemistry)
March 09 ஞாயிறு மாலை 3.30 - 6.30 pm (physics)

ICT — ஆசிரியர் S.சஞ்ஜீவன் SLTS, B.Sc (Computer Science)

March 06 வியாழன் மாலை 6.00 - 8.30 pm
March 09 ஞாயிறு காலை 10.00 - 1.00 pm

- எதிர்பார்க்கை பகுதிகள் முழுமையாகக் கலந்துரையாடப்படும்.
- கையேடுகள் வழங்கப்படும்.
- வெளி மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.
- கட்டணத்தைச் செலுத்தி கருத்தரங்கில் பங்குபற்ற முடியும். (C-2378)

தீபம் உயர் கல்விக் கல்லூரி, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 224 7781



**UK BUSINESS VISITOR VISA**

லண்டனில் இடம்பெறும் LONDON TAMIL MARKET வர்த்தக கண்காட்சியில்..

உங்கள் வியாபாரத்தினை பொருட்கள்/உள்ளூர் உற்பத்தி பொருட்கள் / சேவைகள் நீங்களே நேரடியாக சென்று சர்வதேச சந்தையில் விளம்பரப்படுத்த

- விசா விண்ணப்பங்கள்
- STALL BOOKING
- HOTEL BOOKING
- RETURN AIR TICKET
- பயண ஒழுங்குகள்

போன்ற அனைத்து சேவைகளுக்கும்...

தொடர்புகளுக்கு (C-2361)

V2 TRAVELS 0777068777



**சணல் ஆடுகள் விற்பனைக்கு**

இரண்டாம் ஈற்று சணல் ஆடு கிடாய்க் குட்டியுடன் (2 மாதம்) விலை 80,000/=, கன்னி ஆடு 2 மாதம் சினையுடன், விலை 65,000/=, 1 வயது கிடாய் ஆடு விலை 75,000/=

076 223 3096
076 234 6416 (3567)



**வைத்தியம்**

வலிப்பு நோய்|கை விறைப்பு| நாட்பட்ட தலைவலி| மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு| முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி தலைக்கு இரத்தம் போகாமை, வழுக்கை நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்

நல்லூர், யாழ்ப்பாணம்.

Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)

தொடர்புகளுக்கு : 0777 301 669 (893)



**வேலையாட்கள் தேவை**

கொழும்பு நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- காசாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துனர்

உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

T.P.No : 077 386 6250 (3574)



**மலிவு விலையில்**

பாடசாலை மாணவர்களுக்கான காலுறைகள் மொத்த கொள்வனவுக்கு விசேட விலைக்கழிவு (C-2373)

SILVER SHIELD NYLON STRETCH SOCKS

ஸ்ரீமுருகன் No.303, K.K.S Road, Jaffna.



**வேலைவாய்ப்பு**

அலுவலகம் ஒன்றிற்கு கணக்கு + கணனி அனுபவமுள்ள பணியாளர் (பெண்) தேவை.

தொடர்புகளுக்கு : 077 603 1723 (3572)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் ... யாழ்ப்பாணம் ... அவர்களது அச்சகத்தில் 05.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org